பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 01 புதன்கிழமை (17-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:234

## வாகனங்கள் கொள்வனவு விவகாரம்: அமைச்சரவை உபகுழு அறிக்கை இன்று

ஜனாதிபதியின் செயலகத்துக்கு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை குறித்து நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தலைமையிலான அமைச்சர்கள் உபகுழு தயாரித்த அறிக்கை இன்று அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொள்வனவு செய்யப்பட்ட 48 வாகனங்களின் விவரம், அவற்றுக்கு என்ன நேர்ந்தது என்பவை குறித்து அமைச்சர்கள் இருவர் கேள்வி எழுப்பியதைத் தொடர்ந்தே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வாகனங்கள் கொள்வனவுக்கு 6 கோடியே 40 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் பின்னர் அமைச்சரவையின் அனுமதி எதுவுமின்றி 246 கோடி ரூபாவை திறைசேரி வழங்கியிருக்கிறது என்பது தெரிய வந்திருக்கிறது. இவ்வளவு பெருந்தொகைப்பணம் வழங்கப்பட்டதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி பெற்ற கேள்விப் பத்திரக் குழு ஒன்றின் அனுமதியோ, அமைச்சரவை அங்கீகாரமோ பெறப்படவில்லை எனவும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து அமைச்சர்கள ஆராய்வார்கள் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

## தரைப் பாதையூடாக இன்று குடாநாட்டுக்கு எரிபொருள்

### சில தினங்களில் விலை குறையும்

யாழ்ப்பாணம்,ஜூலை17

சுமார் 12 ஆண்டுகளுக்குப் பின்னர் கொழும்பில் இருந்து முதற்றடவையாக தரைப்பாதையூடாக யாழ்ப்பாணத்துக்கு இன்றுமுதல் எரிபொருள் எடுத்து வரப்படவுள்ளது.

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றை பவுஸர்களில் கண்டி வீதி வழியாக எடுத்துவந்து இங்கு விநியோகம் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக ஏ.எம்.ரி. நிறுவனத்தின் இரு பவுஸர்கள் மூலம 66ஆயிரம் லீற்றர் பெற்றோல் இன்று இங்கு எடுத்துவரப்படுகிறது.

வவுனியாவில் இருந்து இன்று காலை புறப்படும் இந்த பவுஸர்கள் மாலையில் யாழ்ப்பாணம் வந்துசேரும என்றும் -

காங்கேசன்துறையில் உள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனக் குதத்தில் பெற்றோலைக் களஞ்சியப்படுத்திய பின்னர் பவுஸர்கள் கொழும்பு திரும்பும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

தரைவழியாக எரிபொருள்கள் எடுத்துவரப்பட்டால் மிக நீண்ட காலத்தின் பின்னர் அவற்றின் விலை குடாநாட்டில் பெருமளவில் குறையும் எனத தெரிவிக்கப்பட்டது.

எரிபொருள்களின் புதிய விலைகள் இன்னும் ஓரிரு நாள்களில் அறிவிக்கப்படும் என்று தெரிகிறது.(ம-3)

# தங்களது கடற்பிரதேசத்தில் சுதந்திரமாக நடமாடும் உரிமை புலிகளுக்கு உள்ளது

## கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் தமிழ்ச்செல்வன் நேரில் வலியுறுத்து

கிளிநொச்சி,ஜூலை17

**தங்களது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கடற்பரப்பில் சுதந்திரமாக நடமாடும் உரிமை புலிகளுக்கு உள்ளது. அதற்குத் தடைவிதிக்கவோ தாக்குதல் நடத்தவோ இலங்கைப் படையினர் முயலக்கூடாது.**

**- இப்படி வலியுறுத்தியிருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.**

**கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன் புருகொவ்டேயை நேற்று கிளிநொச்சியில் சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.**

புலிகளின் அரசியல்துறை நடுவகப் பணியகத்தில் நேற்றுக்காலை 10 மணிமுதல் சுமார் ஒன்றரை மணி நேரம் இச்சந்திப்பு இடம்பெற்றது.

மன்னாருக்கு அப்பால் உள்ள இரணைதீவுக் கடற்பரப்பில் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இச்சம்பவத்தை ஒட்டி ஞாயிறன்று புலிகள் விடுத்த அறிக்கை மையப்பொருளாக அமைந்தது என்று புலிகளின் அரசியல்துறை நடுவகப் பணியகம் நேற்று விடுத்த ஊடக அறிக்கை தெரிவித்தது.

புலிகளின் சுதந்திரமான கடல் போக்குவரத்துக் குறித்து பல தடவைகள் கண்காணிப்புக் குழுவினருடன் கலந்துரையாடப்பட்ட போதும் அது குறித்து ஓர் இறுதித் தீர்வு காணபபடாதமை குறித்து நேற்றைய சந்திப்பின போது புலிகள் தரப்பால் வருத்தம் தெரிவிக்கப்பட்டது.

(2ஆம் பக்கம் பார்க்க)

### பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களில்

## பல்கலை மாணவர் 24 பேர் நேற்று நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ்.நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் 26 பேரில் இருவர் தவர ஏனையோர் நேற்று சட்டத்தரணிகள் மூலம் யாழ்.நீதிமன்றில் ஆஜராகினர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் குழுக்களிடையே கடந்த மாதம் இடம பெற்ற மோதல் சம்பவங்கள தொடர்பாக நீதிமன்ற ஆணைப்படி பொலீஸாரிடம் வாக்குமூலம் அளிக்கத் தவறியமைக்காகவே இந்த 26 மாணவர்களுக்கும் எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இவர்களில் 24 பேர் நேற்று மன்றில் ஆஜராகியதைத் தொடர்ந்து அவர்களுக்கு எதிரான பிடியாணை மீளப்பெறப்பட்டது. அவர்களை யாழ்பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியான பெர்ணாண்டோவிடம் வாக்குமூலம் அளிக்குமாறும் நீதிமன்றம் பணித்தது.

அத்துடன் மன்றில் ஆஜரான மாணவர்கள் செய்த முறைப்பாடு தொடர்பாக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தருக்குக் கடிதம் அனுப்பி அவரின் முழுமையான அறிக்கையை எதிர்வரும் 29 ஆம் திகதி மன்றில் சமர்ப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீதிகளின் குறுக்கே அமர்ந்திருந்தவாறு வேலணையில் நேற்று மாணவர் மறியல்

வேலணை,ஜூலை17

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்கள் குடியிருப்புக்களையும், விவசாய நிலங்களையும் விட்டு படையினர் வெளியேறவேண்டும் என்று கோரியும் -

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தபின்னர் போக்குவரத்துக்கு அனுமதித்த வீதிகளை மீண்டும் மூடியதைக் கண்டித்தும் -

வேலணையில் நேற்றுக்காலை நூற்றுக்கணக்கான மாணவர்கள் வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடற்படையினர் பயன்படுத்தும் பாதைகளை மறிக்கும் நோக்குடன் பிரதான சந்திகளான வங்களாவடிச் சந்தி, சரவணைச் சந்தி, பஸ் கம்பனிச்சந்தி ஆகியவற்றில் மாணவர்கள் வீதிமறிப்புப் போரில் ஈடுபட்டனர்.

காலை 6 மணிக்கு வீதிகளுக்கு குறுக்கே பாரிய மரங்கள், கற்களைப போட்டு வீதித் தடைகளை ஏற்படுத்திய மாணவர்கள், சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு வீதிகளின் குறுக்கே அமர்ந்து கொண்டனர்.

காலை 6.45 மணியளவில் 'பிக்

(2ஆம் பக்கம் பார்க்க)

### பொதுக் கட்டடங்களிலிருந்து

## ஓகஸ்ட் 2க்கு முன் படைகள் முற்றாக வெளியேறிவிடும்!

### கூட்டமைப்பிடம் பிரதமர் உறுதி

கொழும்பு,ஜூலை17

வடக்கு - கிழக்கில் படையினர் நிலைகொண்டுள்ள 67 பொது இடங்களில் 20 இடங்களில் இருந்து அவர்கள் வெளியேறிவிட்டனர். எஞ்சிய இடங்களில் இருந்து கால அட்டவணை ஒன்றின் கீழ் அடுத்தமாதம் 2ஆம் திகதிக்குமுன் படையினர் விலகிவிடுவர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய தமிழ்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் பிரதமருடன் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பாதுகாப்பு அமைச்சுச் செயலர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ மற்றும் முப்படைகளின் தளபதிகள், பொலீஸ் மா அதிபர், அதிரடிப்படைத் தளபதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டமைப்புச் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், வீ.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா, என்.ரவிராஜ், ஜி.ஜி.கஜேந்திரகுமார், எம்.கே.சிவாஜிலிங்கம், ஜோசப் பரராஜசிங்கம், கே. தங்கவடிவேல் ஆகியோர் பங்கேற்றனர்.

கடந்த மாதம் 19ஆம் திகதி நடத்திய பேச்சுக்களில் தெரிவித்தபடி இன்னமும் பொது இடங்களில் இருந்து படையினர் முழுமையாக வெளியேறவில்லை என்று கூட்டமைப்பினர் பிரதமரிடம் பிரஸ்தாபித்தனர்.

படையினர் வெளியேறியதாகத் தெரிவித்த ஆலயங்களில் கூட இன்னமும் பூசைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டினர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### தீவக சம்பவம் குறித்த விசாரணை

## பிரதிப் பொலீஸ்மா அதிபர், கடற்படை அதிகாரி இருவரும் நேற்று மூன்றரை மணிநேரம் சாட்சியம்

யாழ்ப்பாணம்,ஜூலை17

விடுதலைப் புலிகளின் தீவக அரசியல் பொறுப்பாளர் செம்மணன் மற்றும தயாளன் ஆகியோர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த அரசு நியமித்துள்ள சுதந்திர ஆணைக்குழு தனது விசாரணைகளை யாழ். செயலகத்தில் நேற்று ஆரம்பித்தது.

யாழ்.மாவட்ட பிரதிப்பொலீஸ் மா அதிபர் கீர்த்தி கஜநாயக்க, வட பிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர ஆகியோர் நேற்றுத் தமது வாக்குமூலங்களை அளித்தனர்.


யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் முற்பகல் 10 மணிக்கு ஆணைக்குழு தனது விசாரணைகளை ஆரம்பித்தது.

பிரதிப் பொலீஸ்மா அதிபர் கீர்த்தி கஜநாயக்க ஒன்றரை மணிநேரமும் கடற்படைத் தளபதி இரண்டு மணி நேரமும் தமது வாக்குமூலங்களை அளித்தனர்.

(2ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# இது கல்விக்காக நடக்கும் போராட்டம்

நேற்றைய போராட்டத்தின்போது வீதிகளை வழிமறித்து மாணவர்கள், மாணவிகள் அமர்ந்திருக்கின்றனர்.



நயினாதீவுக்கு செல்லவந்த தென்பகுதி மக்கள் சிலர் நேற்றைய வீதிமறிப்பால் மேற்கொண்டு செல்லமுடியாமல் வீதியோரத்தில் தரித்துநிற்பதையும் சரவணைச் சந்தியில் மாணவர்கள் வாகனங்களை தடுத்துநிறுத்துவதையும் படங்களில் காணலாம்.

## பிரதிப் பொலீஸ் மா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல்நாளான நேற்று மேற்குறிப்பிட்ட இருவரையும் தவிர விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களோ, பொது மக்களோ, பொதுஅமைப்புக் களோ ஆணைக்குழுவின் முன்பு ஆஜராகி சாட்சியம் அளிக்கவில்லை. இரண்டாவது நாளாக இன்றும் விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை -

சுயாதீன ஆணைக்குழுவின் முன்பு ஆஜராகி வாக்குமூலம் வழங்குவதற்கு எவரும் அஞ்சத் தேவையில்லை எனவும் -

வாக்குமூலத்தைத் தாம் விரும்பிய எந்த மொழியிலும் வழங்கலாம் எனவும் - சம்பவம் தொடர்பான படங்கள் மற்றும் ஆவணங்கள் இருந்தால அவற்றையும் ஆணைக்குழு விடம் சமர்ப்பிக்கலாம் எனவும் -

குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணி வரையும் விசாரணைகள் இடம்பெறும் எனவும் பொதுமக்கள் தமது பூரண ஒத்துழைப்பை ஆணைக்குழுவுக்கு வழங்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

(ம-10)

## வீதிகளின் குறுக்கே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்' வாகனமொன்றில் வந்த கடற்படையினர், வங்களாவடிச் சந்தியில் மறியலில் ஈடுபட்டிருந்த மாணவர்களைக் கலைந்துசெல்லுமாறும், வீதித் தடைகளை அகற்றுமாறும் வற்புறுத்தினர்.

அதனை ஏற்கமறுத்த மாணவர்கள் தொடர்ந்தும் தமது மறியல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனால் ஆத்திரமடைந்த கடற்படையினர், மாணவர்கலை நோக்கி தமது ஆயுதங்களை நீட்டியவாறு மாணவர்களுக்கு அருகில் சென்று மிரட்டியதாகவும் -

மாணவர்கள் தமது இடங்களை விட்டு அசையாது உறுதியாக நிற்கவே அவர்களைப் பிடித்து இழுத்து வீதியோரத்திற்குத் தள்ளியதுடன் வீதித் தடைகளை அகற்றுமாறு அவர்களை நிர்ப்பந்தித்தார்கள் என்றும் -

இறுதியில் தாங்களாகவே வீதித் தடைகளை அகற்றி 'பிக்கப்' வாகனத்தை எடுத்துச்சென்றனர் என்றும -

மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்தனர்.

பின்னர் மீண்டும் வங்களாவடிச் சந்திக்கு வந்த கடற்படையினர், அங்கு மறியலில் ஈடுபட்ட மாணவர்களை வீடியோப்படம் பிடிக்க முற்பட்டனர். மாணவர்கள் ஒன்றுதிரண்டு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். படம் பிடிக்கவேண்டாம் என அவர்கள் கடற்படையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து கடற்படையினர் வீடியோப் படம் எடுக்கும் தமது முயற்சியைக் கைவிட்டனர்.

நேற்றுப்பிற்பகல் 3 மணியளவில இந்தப் போராட்டம் இடைநிறுத்தப்பட்டது. அதன்பின்னர் மாணவர்களும் பொதுமக்களும் வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில் ஒன்றுகூடி தமது அடுத்த நடவடிக்கை குறித்து ஆராய்ந்தனர்.

வீதிமறிப்புப் போராட்டத்தை இன்று இடைநிறுத்தி பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்வது என்றும் -

மாணவரின் சுதந்திரமான போக்குவரத்துக்குப் படையினர் தொடர்ந்தும் அனுமதியளிக்காவிட்டால் பெரிய அளவில் போராட்டத்தை முன்னெடுப்பது என்றும் -

அங்கு முடிவுசெய்யப்பட்டது.

இதற்கிடையில் வேலணை மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள வீதி மாணவர்கள், ஆசிரியர்களின் போக்குவரத்துக்கு இன்றுமுதல் திறந்து விடப்படும் என்று கடற்படை அதிகாரி தீவக நலன்காப்பகத்துக்கு நேற்று மாலை அறிவித்துள்ளார்.

இன்றுகாலை அந்தப் பாடசாலைக்கு கடற்படையின் தீவகக் கட்டளை அதிகாரி நேரடியாக வருகைதர இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் வீதிமறிப்புப் போராட்டம் காரணமாக நேற்று அராலிச்சந்திக்கு அப்பால் பொதுமக்கள் போக்குவரத்து எவையும் இடம்பெறவில்லை. இதன்காரணமாக பணிக்குச் சென்ற அரச ஊழியர்கள் யாழ்ப்பாணம் திரும்பினர். நயினாதீவுக்குச் செல்வதற்காக சென்ற யாத்திரிகர்களும் அராலிச் சந்தியில் காத்திருந்தனர். போராட்டம் முடிவடைந்த பின்னரே அவர்கள் நயினாதீவுக்குச் சென்றனர்.

போராட்டத்தின் இடையில் வேலணையில் உள்ள யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

(ம-3-8-167-ரி)

## தங்களது கடற்பிரதேசத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒன்றரை மணிநேரம் நடைபெற்ற இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த ஞாயிறன்று விடுத்த அறிக்கை, கலந்துரையாடலின் மையப் பொருளாக அமைந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்போக்குவரத்துத் தொடர்பாக பல தடவைகள் கலந்துரையாடப்பட்ட பொழுதும், இறுதியான ஒரு முடிவு எட்டப்படாதது குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் வருத்தம் தெரிவிக்கப்பட்டது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்து 1.3 இன் பிரகாரம் தமிழீழ விடுதலைப புலிகள் தங்களது கட்டுப்பாட்டின் கீழ உள்ள கடற்பரப்பில் நடமாடுவது தொடர்பாக எதுவித தடைகளும் விதந்துரைக்கப்படாத வகையிலும், இலங்கைப் பண்டயினர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக எதுவித தாக்குதல் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதைத் தவிர்க்கவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருப்பதினாலும், தமிழீழ விடுதலைப் புலிகள் சுதந்திரமாகத் தமது கடற்பரப்பில் நடமாடும் உரிமையைக் கொண்டுள்ளனர் என்றும் கணகாணிப்புக் குழுத் தலைவருக்கு வலியுறுத்திக் கூறப்பட்டது.

இலங்கைப் பிரதமர் ஒருதரப்பாகவும் தமிழீழத் தேசியத் தலைவர் மறுதரப்பாகவும் இணங்கி கைச்சாத்திட்ட போர்நிறுத்த ஒப்பந்தம், மீறல்கள் எதுவுமின்றி நடைமுறைப்படுத்தப்படும் போது ஸ்ரீலங்கா கடற்படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ உள்ள கடற்பிரதேசத்தினுள் தேவையற்ற வகையில் நுழைந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் போக்குவரத்துப படகுகளையும் மீன்பிடிப் படகுகளையும், அவை விடுதலைப் புலிகளின் படகுகள் என்று நன்கு தெரிந்த பின்பும் தடுத்து நிறுத்துவதும் சோதனையிட நிர்ப்பந்திப்பதும் ஆத்திரமூட்டும் வகையிலான நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் தவிர்க்கப்படவேண்டும் என்று பல தடவைகளில் வலியுறுத்தப்பட்டது. எனினும் தொடர்ந்தும் அவர்கள் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து விடுதலைப் புலிகள் தரப்பின் ஆட்சேபனையும் கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் தெரிவிக்கப்பட்டது.

தேவையற்ற மோதல் நிலைகளைத் தவிர்ப்பதற்காக ஸ்ரீலங்காக் கடற்படை வடக்கு - கிழக்கில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுபபாட்டின கீழ்வரும், கடற்பிரதேசத்தில் கரையில் இருந்து 10 கடல்மைல் தொலைவுக்கு அப்பால் தங்கள் போக்குவரவுகளை மேற்கொள்வது மோதல்களைத் தவிர்க்க உதவுமென பல தடவைகள் வலியுறுத்தித் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த எல்லைக் கட்டுப்பாட்டை கடற்படையினர் பேணாமல் எமது கடற்பரப்பினுள் நுழைந்து ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் இரண்டு தரப்பும் ஒப்பமிட்ட வகையில் ஸ்ரீலங்காவில் இரண்டு படைகள் உள்ளன என்ற கருத்து அடிக்கோடிடப்பட்டுள்ளது. போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இருதரப்பும் மோதல் தவிர்த்து நம்பிக்கையைக் கட்டியெழுப்பி நிலையான சமாதானத்தையும் அரசியல் தீர்வையும் எட்டவேண்டும் என்பது தெளிவு. இந்தவகையில் ஒப்பந்த விதிகளை எதுவிதத்திலும் மீறாமல் விடுதலைப் புலிகள் தங்களைத் தெளிவாக அடையாளப்படுத்திவாறு கடற்பரப்பில் சுதந்திரமாக நடமாடுவதற்கு உரித்துடையவர் ஆகின்றனர்.

இப்பின்னணியில் 13 ஜூலை 2002 அன்று இரணைதீவுக் கடற்பகுதியில இடம்பெற்ற, மோதலை உருவாக்கக் கூடிய சம்பவம் முற்றிலும் தவிர்க்கப்பட்டிருக்கக்கூடிய ஒன்றே.

இதில் கண்காணிப்புக் குழுவினர் கடற்படையினரால் திட்டமிட்ட வகையில் அழைக்கப்பட்டு கடற்படையினருடன் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டமையால் அவர்கள் துரதிர்ஷ்டவசமாக அசௌகரியங்களுக்கு உட்பட நேரிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலி அணியினர் கண்காணிப்புக் குழு அங்கத்தவர்களின் பாதுகாப்புக் கருதியே அவர்களைத் தமது படகில அழைத்துவர நேர்ந்தது. இதன்போது அவர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்திற்கும் மன உளைச்சலுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கும் அதே வேளை, தங்கள் நடவடிக்கை முற்றிலும் நல்லெண்ணத்தின்பாற்பட்டதே என்பதையும் வலியுறுத்த விரும்புகினறனர்.

அச்சந்தர்ப்பத்தில் கண்காணிப்புக் குழு அங்கத்தவர்களுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்திருந்தால் அதற்கான பொறுப்பை ஸ்ரீலங்காக் கடற்படையின் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதே சுமத்தியிருப்பர். இத்தகைய ஒரு மோசமான நிலையைத் தவிர்ப்பதற்கே கடற்புலிகள் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களைத் தமது படகில் பாதுகாப்பாக ஏற்றிச்செல்ல நேர்ந்தது.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மீதும் அதன் தலைவர் மீதும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குள்ள நம்பிக்கை இச்சம்பவத்தால் எவ்விதத்திலும் பங்கமடையவில்லை என்பதை இங்கு வலியுறுத்திக்கூற விரும்புகிறோம்.


அத்தோடு கடற்படையினரின் நடவடிக்கை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உள்ள நியாயமான கரிசனைகளைக் கருத்திற்கொண்டு கண்காணிப்புக்குழு ஸ்ரீலங்கா அரசுடன் பேசி கடற்படையினரைக் கட்டுபபாட்டுக்குள் 'கொண்டுவந்து போர்நிறுத்த ஒப்பந்தத்தை செம்மையாக நடைமுறைப்படுத்த அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுமெனவும் நம்புகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்படையணி தமது கட்டுப்பாட்டின கீழ் உள்ள கடற்பரப்பில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறாதவகையில் வழமையான நடவடிக்கைகளில் ஈடுபடும்.

கடலில் காணப்படும் படகுகள் கடற்புலிகளதுதான் என்பதை அடையாளப்படுத்தி உறுதிப்படுத்துமிடத்து அப்படகுகள் மீது எதுவித ஆத்திரமூட்டும் செயற்பாடுகளிலோ அல்லது அச்சுறுத்தல் நடவடிக்கைகளிலோ ஈடுபடுவதைத் தவிர்த்து செயற்பட வேண்டியது போர்நிறுத்த உடன்பாட்டின் பிரகாரம் கடற்படையினரின் கடப்பாடாகும்.

ஸ்ரீலங்காக் கடற்படையினர் தமது அத்துமீறல்களை நிறுத்தி விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் மோதலைத் தவிர்க்க போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உதவுமென்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



தளபதி கேணல் பால்ராஜ் பிரதான ஈகச் சுடரை ஏற்றி...



தமிழீழ தேசியக் கொடியை ஏற்றிவைக்கிறார்.



லெப்.சீலனின் உருவப் படத்திற்கு போராளி ஒருவரின் மலரஞ்சலி.



சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த போராளிகளின் அணிவகுப்பு.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதிகளில் ஒருவரான தளபதி லெப்.சீலனின் (சாள்ஸ் அன்ரனி) 19ஆவது ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு வன்னியில் நடநத சிறப்புநிகழ்வுகளின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.



சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி வீரமணி தலைமையில் தளபதிகள் அணிவகுப்பு மரியாதையை ஏற்கிறார்கள்.

# தமிழர் உரிமைகள் மீட்கப்படும் வரை நாம் தயார் நிலையில் இருப்போம்

## போராளிகளுக்கு பால்ராஜ் அறைகூவல்

யாழ்ப்பாணம்,ஜூலை17

புரிந்துணர்வு உடன்படிக்கை நிலைத்து சமாதான வழியில் எமது மக்களுக்கான உரிமைகள் மீட்கப்பட்டு நம்பகமான நிரந்தரத் தீர்வுவரும் வரை படையணியைச் சேர்ந்த போராளிகள் விழிப்புடன் தயார் நிலையில் இருக்கவேண்டும்.



விடுதலைப் புலிகளின் கட்டளைத் தளபதிகளில் ஒருவரும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியுமான கேணல் பால்ராஜ் மேற கண்டவாறு தெரிவித்தார்.

லெப்.சீலனின் 19 ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் நடந்த சமயம் அதில் சிறப்புரையாற்றுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தளபதி லெப்.சீலன் என்ற லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி எமது இயக்கத்தின் மூத்த உறுப்பினரும், தலைசறந்த ஒரு கெரில்லா போராட்ட வீரரும் ஆவார். தமிழீழ மக்களின் சுதந்திர எழுச்சிப் போராட்டத்தில் அன்றைய காலகட்டத்தில் முதன்மைத் திறன்களைப் புரிந்து இன்றைய எமது இயக்கத்தின் பரிணாம வளர்ச்சிக்கு வித்திட்ட அந்த வீரத் தளபதியின் பத்தொன்பதாம் ஆண்டு நினைவை நாம் நினைவுகூருகின்றோம். இந்த முதன்மை வீரன் தனது பள்ளிப் பராயத்திலேயே சிங்கள இனவாத அரசின் ஒடுக்குமுறையை எதிர்க்கும் வகையில் திருமலை இந்துக் கல்லூரியில் ஸ்ரீலங்காவின் தேசியக்கொடி ஏற்றப்படும்போது அந்தக் கொடியை எரித்தார்.

தமிழரின் போராட்ட வரலாற்றில் இராணுவத்தினருக்கு எதிராகத் தாககுதல் நடத்தி இரண்டு ஸ்ரீலங்கா இராணுவத்தினரைக் கொன்று முதன்முதலில எதிரியிடம் இருந்து ஆயுதத்தை எமது இயக்கத்துக்கு பெற்றுத்தந்தவர்.

தளபதி சீலன் தானே தலைமை ஏற்று 1982 ஆம் ஆண்டு யாழ். பொன்னாலைப் பாலத்தில் நடத்தப்பட்ட தாக்குதல், சாவகச்சேரி பொலீஸ் நிலையம் மீதான தாக்குதல், கந்தர்மடத்தில் இராணுவத்தின் மீதான தாக்குதல், தேசத் துரோகிகள் மீதான தாக்குதல், காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் வெடிப் பொருள்கள் மீட்பு போன்றவற்றை முன்னின்று செய்து முடித்தவர்.

அன்றைய அந்த குறுகிய காலகட்டத்தில் மூன்று தடவைகள் காயமடைந்த நிலையிலும் அவர் காட்டிய உறுதி அதிஉச்ச உளவுரணை எமக்குத் தந்தது. அந்த மாவீரன் இறுதியாக எம்மை விட்டுப் பிரியும் அவ்வேளையிலும் எமது இயக்கத்தின் நலன்கருதி தனது ஆயுதம் எதிரியின் கையில் அகப்படக்கூடாது என்ற காரணத்துக்காகவும் தான் எதிரியிடம் பிடிபடக்கூடாது என்ற காரணத்துககாகவும் விழுப்புண் அடைந்த நிலையில் தான் உயிர்தப்பிக்கொள்வது சாத்தியம் இல்லை என்பதை உணர்ந்து தனது தோழனுக்குக் கட்டளை பிறப்பித்து அந்தத் தோழனின் துப்பாக்கிக் குண்டின்மூலம் தனது உயிரை மீசாலை மண்ணில் துறந்தான் லெப். சீலன்.

இப்படிப்பட்டதொரு புதிய மரபைத தோற்றுவித்ததுடன் திருமலை மண்ணின் முதல் மாவீரன் என்ற பெயரைப் பெற்றதுடன் தமிழீழ மண்ணிலேயே முதல்வித்தான விடுதலைப் புலிகளின் மாவீரன் என்ற பெயரையும் சேர்த்துக் கொண்டவர் லெப். சீலன்.

அன்று அவரது இழப்பைத் தாங்க முடியாத எமது தலைவர் அவரது உடையை அணிந்தே பதிலடிக்குப் புறப்பட்டு 23.07.1983 அன்று திருநெல்வேலியில் இராணுவத்தினரின் வாகனத் தொடரணி மீது கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றை நடத்தினார். எமது போராட்ட வரலாற்றில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது இத் தாக்குதல்.

எனவே, அவரது நினைவை நினைவு கொள்ளும் இவ்வேளையிலேயே அவரது நாமத்தின் பெயரால் உருவாக்கப்பட்ட "சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி" 1991 ஏப்ரல் 10 இல் தோற்றம் பெற்றதில் இருந்து "வன்னி விக்கிரம" இராணுவ நடவடிக்கை முறியடிப்புச் சமரில் தொடங்கி இன்றைய திருப்புமுனைக்குக் காரணமாக அமைநத "அக்கினி கீல" முறியடிப்புச் சமருக்கு இடைப்பட்ட காலங்களில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட வலிந்து தாக்குதல் நடவடிக்கைகளிலும் முதற்றரமான பகுதிகளைப் பொறுப்பெடுத்து அதைச்செய்து முடித்து வெற்றிப்பெற்றுத்தந்தார்கள்.

இந்தப் படையணியில் இருந்து தமிழீழ மண்ணின் விடுதலைக்காகப் போராடி இதுவரை 11 தளபதிகள் உட்பட ஆயிரத்து 100 மாவீரர்கள் இன்னுயிர்களை ஈர்த்துள்ளார்கள். அவர்களை இந்த இடத்தில் நினைவு கொள்ளும் இவ்வேளை, நாம் உலகம் வியக்கும் வகையில் இராணுவ வெற்றிகளை ஈட்டி பலமான நிலையில் உள்ளோம்.

இந்த நிலையில் எமது மக்களுக்கான உரிமையினை சமாதான வழியில் அடையமுடியும் என்ற நம்பிக்கையுடன் இன்றைய காலகட்டத்தில் சென்று கொண்டிருக்கின்றோம். எமது பலத்தின் மூலமே இன்றைய புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளது. அந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் நிலைத்து சமாதான வழியில் எமது மக்களுக்கான உரிமைகள் மீட்டுக்கொடுக்கப்பட்டு, நிரந்தரமான - நம்பகமான தீர்வு வரும்வரை படையணியைச் சேர்ந்த போராளிகள் விழிப்புடன் தயார் நிலையில் இருக்க வேண்டும் - என்றார்.

(ஒ-3)

## யாழ்.வலய தமிழ்த்தின போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ்.வலயப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தின போட்டிகளில் இன்று காலை 9 மணிமுதல் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் வாசிப்பு ஆக்கத்திறன், இசையும் அசைவும், இசை தனி, குழு, நாட்டுக் கூத்து, இசை நாடகப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

நடனம், தனிகுழு நாடகம், வில்லுப்பாட்டு, விவாதம், தமிழறிவு வினா விடைப் போட்டிகள் நாளை காலை 9மணிமுதல் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.(ஒ-9)

## அரசியல்துறையுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை17

கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட அனைத்து கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சனசமூக நிலைய நிர்வாகிகள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை மாலை 3மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முக்கிய பல விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலநது கொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் வலிகாமம் கிழக்கு அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (ஒ-9)


## தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடங்கள்

தமிழீழ காவல்துறையில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்கள் வசமுள்ள சான்றிதழ் களுடன் பளை காவல் பணிமனையில் நாளை 18.07.2002 முதல் 28.07.2002 வரை நேரில் சமுகந்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**01.உப பரிசோதகர் (SUB INSPECTOR)**

*கல்வித் தகைமை:* க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதம்/எண்கணிதம் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தியுடன் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

*வயது:* 20 தொடக்கம் 30 வரை.

*உயரம்:* 5 அடி 6 அங்குலத்துக்கு மேல்.

**02.காவலர் (POLICE CONSTABLE)**

*கல்வித் தகைமை:* க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ், கணித பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயது: 20 தொடக்கம் 30 வரை.

உயரம்: 5 அடி 6 அங்குலத்துக்கு மேல்.

**03.எழுதுவினைஞர்கள் (CLERKS)**

*கல்வித் தகைமை:* க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ், கணிதம்/எண்கணிதம் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தியுடன் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*வயது:* 20 முதல் 30 வரை.

*உயரம்:* 5 அடி 6 அங்குலத்துக்கு மேல்.

*மேற்கூறிய பதவிகளுக்கு தங்குமிட வசதி, உணவு, சீருடை, போக்குவரத்து, மருத்துவம் என்பன வேதனத்துடன் மேலதிகமாக வழங்கப்படும்.*

பொறுப்பாளர்,
ஆளணிப் பிரிவு, காவல்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-22957)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Computer விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பா.கோபி, 258, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (6045)

ஹொட்டல், புடைவைக்கடை, பல சரக்குக் கடை பாவனைக்கு உரிய நல்ல நிலையில் உள்ள அலுமினிய, மர ஷோக்கேசுகள் விற்பனைக்கு உண்டு தொடர்பு இல.86, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (பீற்றர் வீடியோ முன்பாக) (6043)

புரோயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. (1kg - 140/=) தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- திலா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (C/22760)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தேவையான நிறைகளில் குறைந்த விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (6058)

### தவறிவிட்டது

மீசாலை வடக்கைச் சேர்ந்த கிருஸ்ணராஜா நாகேஸ்வரி என்பவருடைய விசேட அடையாள அட்டையும், ஒரு சோடிகாப்பும் யாழ்.பஸ்தரிப்பு நிலையத்தில் பஸ்ஸில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மீசாலை ஜெயம் கடையில் ஒப்படைத்துதவவும்; சன்மானம் வழங்கப்படும்.(6046)

கரம்பகம் மிருசுவிலைச் சேர்ந்த வயிரமுத்து கயிலாயபிள்ளை என்பவரது தே.அ. அ.(இல.652481981V), வி.அ.அட்டை (இல091033846) என்பன 15.07.2002 அன்று அச்சுவேலிக்கும் சுன்னாகம் சந்தைப்பகுதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள குணம் வெற்றிலைக்கடை, சுன்னாகம் அல்லது ஆ.சுப்பிரமணியம், மத்திய கல்லூரி வீதி அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6060)

8ஆம் ஒழுங்கை, வாசவவீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13ஐச் சேர்ந்த சந்தனம் உதயகுமார் என்பவரது தே.அ.அ.(662851582V), தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் (714700) என்பன அளவெட்டிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சிபாலசுந்தரம், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் ஒப்படைக்கவும்.(6037)

33, அரசடி வீதி, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சர்வநந்தினி நாகராசா என்பவருடைய தேசிய அ.அ.(இல.787213510V), விசேட அ.அ.(இல.0902029468) என்பன 15.07.2002 அன்று யாழ்.நவீன சந்தைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். (6061)

### மணமக்கள் தேவை

1971 அத்தம் London பட்டதாரி மணப்பெண்ணுக்கு P/R மணமகன் U.Kஇல் தேவை. சீதனம் உண்டு. மணமக்கள் தேர்வுக்கு தொடர்பு கொள்ளவும். விவாகரத்துடைய மணமகன்களுண்டு தொடர்பு: துரைவிமலா இலகு திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (6059)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1970 இல் பிறந்த, ரோகிணி நட்சத்திர உதயத்தில் செவ்வாயுள்ள, லண்டனில் தொழில் புரியும் பிரஜாவுரிமைபெற்ற மணமகனுக்கு மிகவும் அழகான, சிவந்த நிறமுள்ள, படித்த மணமகள் தேவை. சீதனம் எதுவும் தேவையில்லை புகைப்படம் ஜாதக குறிப்புடன் விண்ணப்பிக்கவும். வி.இ 1557, மே/பா.உதயன், யாழ்ப்பாணம். (6027)


**கீன் சென்ரர்**
திருநெல்வேலி.

**சேதன இரசாயனம் 2003 A/L**

By: **வாசன்**

புதன் | 5.00-6.30p.m
வியாழன் | (ப.நே.)

ஆரம்பம்: இன்று (17.07.2002) புதன் 5.00p.m
(6065) நிர்வாகம்.


# மக்கள் வங்கியின் முகாமைத்துவ பயிலுநர் பரீட்சை தெரிவு செய்யப்பட்டோர் விவரம்

## இரண்டாம் கட்டத்தேர்வு ஜூலை 21இல்

யாழ்ப்பாணம்,ஜூலை17

மக்கள் வங்கி முகாமைத்துவ பயிலுநருக்கான முதல்கட்டம் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அந்தப் பட்டியல் வருமாறு:-

எஸ்.தயாவனி (சுன்னாகம்), திருமதி எஸ்.கஸ்தூரி (அல்வாய்), ரி.கஸ்தூரா (கெருடாவில்), ரி.தனேந்திரன் (கொட்டடி), ஈ.ஆர்னல்ட் (பாசையூர்), எஸ்.பாலமுருகன் (வதிரி), எஸ்.மதிவதனா (அல்வாய்), கே.கிரிதரன் (வளலாய்), ஏ.சயந்தினி (மல்லாகம்), ஈ.என்.ரஞ்சித்ராஜ் (உயரப்புலம்).

எஸ்.சரத்சந்தர் (வட்டுக்கோட்டை), பி.கல்கி (சுண்டுக்குளி), கே.தவனேசன் (இருபாலை), எஸ்.சங்கரதாஸ் (இணுவில்), செல்வி கே.சரவணபவன் (தாவடி), செல்வி ரி.நவநீத கிருஷ்ணன் (நயினாதீவு), ஈ.நளாயினி (பாசையூர்), செல்வி எம்.வி. மயில்வாகனம் (இயற்றாலை), பி.நகுலன் (மாவிட்டபுரம்), எஸ்.சஞ்சயன் (கந்தர்மடம்).

எஸ்.குமரமனோகரி (வதிரி), செல்வி எஸ்.கிருஷ்ணராசா (தையிட்டி), எஸ்.மகேந்திரராஜ் (அரியாலை,), திருமதி எம்.கிரிதரன் (தாவடி), செல்வி ஜெ.குமாரசாமி (அராலி), செல்வி ஆர்.பொன்னையா (சுதுமலை), செல்வி எஸ்.மகாதேவன் (உரும்பிராய்), கே.கிருபாகரன் (வதிரி), செல்வி ஆர்.ரணசிங்கம் (நவாலி), செல்வி எஸ்.இராமலிங்கம் (இணுவில்).

ஆர்.கோகுலதாஸ் (நாகர்கோயில்), பி.ரஞ்சிதமலர் (வல்வெட்டித்துறை), செல்வி எஸ்.சந்திரசேகரம் (புத்தூர்), எஸ்.ரகுமேஷ் (நல்லூர்), ஆர்.யோ.இன்பராஜ் (மல்லாகம்), செல்வி ஆர்.கனகரட்ணம் (நெல்லியடி), கே.ஜெயதாஸ் (அல்வாய்), செல்வி ஜே.பாலசிங்கம் (நவாலி), செல்வி கே.கணேசரத்தினம் (மாதகல்), எம்.தவலிங்கம் (புலோலி).

செல்வி ரி.தேவராஜா (யாழ். பல்கலை), ரி.ஜே.ஜே.தேவதாஸ் (பண்டத்தரிப்பு), திருமதி கே.வெந்நிலா (புத்தூர்), செல்வி எஸ்.விஸ்வலிங்கம் (சுண்டுக்குளி,), செல்வி ஜி. சதாசிவ சர்மா (மட்டுவில்), எஸ்.சத்தியசீலன் (துன்னாலை), எஸ்.சத்தியசீலன் (அராலி), செல்வி ஜி.இராசதுரை (சுன்னாகம்), செல்வி ஜே.செல்லத்துரை (அச்சுவேலி), திருமதி ஜி.செல்வச்சந்திரன் (சாவற்கட்டு).

செல்வி ஆர்.செல்வமதி (துன்னாலை), எம்.செல்வரட்ணம் (இமையாணன்), என்.சுரேஷ் (நெல்லியடி), செல்வி ரி.தங்கவேலு (துர்க்காபுரம் மகளிர் இல்லம்), ஆர்.சுதாஜனன் (நாவலர்றோட், யாழ்.), செல்வி எஸ்.தர்மலிங்கம் (வல்வெட்டித்துறை), ரி.தனேந்திரன் (கொட்டடி), செல்வி எஸ்.சிவகுமாரன் (காரைநகர்), எம்.சுகந்தன் (திருநெல்வேலி), எஸ்.சுபாஷினி (இணுவில்).

எஸ்.வசந்தகுமார் (யாழ்ப்பாணம்), திருமதி ஜே.விக்னேஸ் (யாழ்ப்பாணம்), எஸ்.சூரிய குமாரன் (மக்கள் வங்கி, யாழ்.பல் கலைக்கிளை), ஏ.அன்ரன் அருள்ராஜ் (முல்லைத்தீவு), என்.உதயகுமார் (வட்டக்கச்சி), ரி.கணேஸ்ராஜா (முல்லைத்தீவு), எம்.கிருபாகரன் (அலம்பில்), பி.லோகேஸ்வரன் (மாங்குளம்), திருமதி ஆர்.எம்.ஏ. தவநாயகம் (மக்கள் வங்கி யாழ். பிராந்திய அலுவலகம்).

இவர்களுக்கான இரண்டாம் கட்டப் பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதி கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற உள்ளதாகவும் -

இதற்கான பரீட்சை அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும்-பிரதேச முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஓ-9)

## மல்லாகத்தில் சிகை ஒப்பனையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை17

சுன்னாகம் பகுதி சிகை ஒப்பனையாளர் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடலொன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மல்லாகம் சித்திவிநாயகர் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் நா.லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இக் கலந்துரையாடலில் சிறப்பு விருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.யாழவன் கலந்துகொள்கிறார். (ஓ-9)

## குருநகர் மீனவருக்கு விரைவில் புதிய அனுமதிப்பத்திரம்

குருநகர்,ஜூலை17

குருநகரிலுள்ள கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு, தற்போது நடைமுறையிலுள்ள கடல் அனுமதிப் பத்திரங்களுக்குப் பதிலாக புதிய கடல் அனுமதிப் பத்திரங்கள் விரைவில் வழங்கப்பட உள்ளன என குருநகர் பிரதேச கடற்றொழிலாளர் சங்கங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தற்போது நடைமுறையிலுள்ள அனுமதிப்பத்திரத்தில் கடற்றொழிலாளியின் பெயர், விலாசம் மற்றும் அவரது புகைப்படம் ஒட்டப்பட்டு அதன்கீழ் அவருக்குக் கடல் அனுமதிப்பத்திரத்தை வழங்கியுள்ள கடற்றொழில் சங்கத்தின் பெயருடன் அச் சங்கத்தின் தலைவர், செயலாளர் மற்றும் இராணுவ அதிகாரியின் கையொப்பங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

புதிய கடல் அனுமதிப் பத்திரத்தில் கடற்றொழிலாளர் வசிக்கும் பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலரின் கையொப்பம் மேலதிகமாக இடப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-51)

## காரைநகர் கடைசி பஸ்ஸின் நேரத்தை நீடிக்கக் கோரிக்கை

யாழ்நகரில் இருந்து காரைநகருக்கான கடைசி பஸ் சேவையின் நேரத்தை நீடிக்கும்படி காரைநகர் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்நகரில் இருந்து காரைநகருக்கு மாலை 6.00 மணிக்குப் பின்னர் பஸ்கள் எதுவும் செல்வதில்லை. இதனால் யாழ்நகரில் வர்த்தக நிலையங்களில் கடமை புரிவோர் உட்பட பெருமளவு மக்கள் 6.00 மணிக்குப் பின் காரைநகருக்கு பஸ்சேவை இன்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனாலேயே, கடைசி பஸ் சேவையை இரவு 7.30மணி வரையாவது நீடிக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை -

காரைநகரில் இருந்து கடந்த காலங்களில் தடம் எண் 784 வழியூடாக பஸ்சேவை நடத்தப்பட்டு வந்தது. இதனால் காரைநகரில் இருந்து நூற்றுக்கணக்கான பயணிகள் குறுகிய நேரத்தில் யாழ்நகரை வந்தடைவதுடன், செட்டியார்மடம், அராலிப்பகுதி மக்களும் இச்சேவையினால் பயன்பெற்றனர். இதனால் இப்பாதை ஊடாக பஸ்சேவை நடத்தப்பட வேண்டும் எனவும் மக்கள் கேட்டுள்ளனர். (ஓ-73)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

கொழும்பு பல்கலைக்கழகத்திலுள்ள தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பிரிவு IIஇல் முதலாம் இடத்தைத் தட்டிக்கொண்ட யா/ஹாட்டிலிக் கல்லூரி மாணவனான தரம் 11A வகுப்பைச் சேர்ந்த

**செல்வன் தங்கேஸ்வரன் ஜெயராம்**

அவர்களை நாங்கள் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தரம்11Aமாணவர்கள், யா/ஹாட்லிக் கல்லூரி. (6068)



**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின்**
**வலைப்பந்தாட்ட அணியினர்களை**
**வாழ்த்திப் பெருமை கொள்கின்றோம்**

வடக்குக் கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையேயான வலைப்பந்தாட்டப் போட்டியில் பங்கு பற்றி,

19 வயதுப் பிரிவில் - முதலாம் இடம்
17 வயதுப் பிரிவில் - முதலாம் இடம் பெற்று

வரலாற்றில் இரு அணிகள் ஒரே பாடசாலையில் இருந்து 'சம்பியன்'களாகி பாடசாலைக்கும், எமது கிராமத்திற்கும் பெருமை சேர்ந்த வீராங்கனைகளையும், பயிற்றுவித்த பயிற்றுநரையும், ஆசிரியர்களையும், வழிகாட்டிய அதிபரையும் வாழ்த்தி பெருமை கொள்கின்றோம்.

மணிமேகன் சனசமூக நிலையம்,
சண்டிலிப்பாய்.
(6067)



**உதவி ஆள் தேவை**

83 வயது அரசாங்க ஓய்வூதியருக்கு, நடுத்தர வயதுடைய வீட்டு உதவி ஆள் ஒருவர் உடன் தேவை. தனிமையாய்த் தனது வீட்டில் வசிப்பதால் அதற்கேற்ப உதவ வேண்டும். வீட்டு வசதிகள் யாவும் உண்டு. நியாயமான சம்பளம் சலுகைகள் கொடுக்கப்படும்.

த.கந்தசாமி

விலாசம்:-
இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர்,
சிவன்கந்தஸ்தான்,
துன்னாலை மேற்கு, கரவெட்டி
(6063)



**சுகாதார விஞ்ஞானத் துறையில் தொழில்**

சுகாதார விஞ்ஞானத்தில் திருப்திகரமான தொழிலைக் கொண்டிருப்பதற்கு நீங்கள் மருத்துவராக, அல்லது பல் வைத்திய நிபுணராக இருக்கத் தேவையில்லை. இதோ உங்களுக்கு ஒரு நல்ல செய்தி.

அவுஸ்திரேலியாவில் உள்ள மிகவும் மேன்மையான பல்கலைக்கழகங்கள் சுகாதார விஞ்ஞானத் துறையில் மிக உயர்வான, பல்வகைப்பட்ட விசேடமான பாடநெறிகளை வழங்குகின்றன.

நாம் பிரதிநிதித்துவப்படுத்தும் அவுஸ்திரேலியாவில் உள்ள பல்கலைக்கழகங்களிலிருந்து பட்டதாரிகளுக்கு உலகம் பூராவும் அதிகளவு கிராக்கியுள்ளது.

நீங்கள் பின்பற்றக்கூடிய பாடநெறிகள் வருமாறு:

* உயிரியல் மருத்துவ விஞ்ஞானம்
* நரம்பு விஞ்ஞானம்
* உயிரியல் தகவலியல்
* மருந்பாக்கு இரசாயனவியல்
* சட்டமருத்துவ இரசாயனவியல்
* மருத்துவக்குரிய துறை
* உயிரியல் மருத்துவ எந்திரவியல்
* மூலக்கூறு உயிரியல்
* குற்றவியலியல்
* நோயியல்
* உடற்றொழிலியல்
* உளவியல்
* பிறப்புரிமை எந்திரவியல்

2003 பெப்ரவரி புதுமுகத்திற்கு இப்பொழுதே விண்ணப்பியுங்கள்

மேலும் தகவலுக்கும், எமது உயர்தொழில்சார் ரீதியில் பயிற்றுவிக்கப்பட்ட அலுவலருடனான இலவச ஆலோசனைக்கும் எமது எட்லொக்கேற் அலுவலகத்தை அழையுங்கள்.

edlocate EDUCATION AUSTRALIA

எட்லொக்கேற் (பிறைவேற்) லிமிற்றெற்
23/1, ரொஸ்மீட் பிளேஸ், கொழும்பு 07
தொலைபேசி: 670748, 074 - 618775 பக்ஸ்: 074 - 790957
ஈமெயில்: marketing@edlocate.lk
வெப்சைட்: www.edlocate.lk

Impact House of Advertising

உதயன்

## சமாதான முயற்சிகளின் தளர்வுக்குக் காரணம் யார்?

நாட்டை உலுக்கி வந்த பேரழிவுதரும் யுத்தம் எப்போது நிற்கும், சமாதானத் தீர்வு எப்போது கிட்டும் என்று ஏங்கித் தவித்த நாட்டு மக்களுக்கு யுத்தநிறுத்தம் பற்றிய சந்தோஷச்செய்தி கடந்த டிசெம்பரில் பண்டிகைக் காலத்தோடு வந்தது.

யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வந்து ஆறு மாதங்கள் தாண்டிவிட்டன.

யுத்தநிறுத்தம் வந்த அதேவேகத்தில் - கையோடு - தமிழர் தரப்புக்கும் சிங்களவர் தரப்புக்கும் இடையில் நல்லெண்ணத்தை உருவாக்கும் வகையில் அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைச்சாத்தானது.

ஒப்பந்தம் கைச்சாத்தாகியும் சுமார் ஐந்து மாதங்களாகிவிட்டன. ஆனால், அதற்குப் பின்னர் சமாதான முயற்சிகளில் பெரும் முன்னேற்றம் ஏதுமில்லை. அது கிணற்றில் போட்ட கல் மாதிரி நகர்வின்றிக் கிடக்கின்றது. பெரும் ஆவலோடும் எதிர்பார்ப்போடும் காத்திருந்த மக்களுக்குப் படுஏமாற்றம்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானபோது அதனடிப்படையில் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் நல்லெண்ணப் புறச்சூழ்நிலையை உருவாக்கும் நடவடிக்கைகள் ஒருபுறம் இடம்பெற மறுபுறத்தில் அமைதித் தீர்வைக் காண்பதற்காக சமாதானப் பேச்சுக்கள் நடைபெறும் என்றுதான் பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், அப்படி நடக்கவில்லை. சமாதான முயற்சிகள் வலுக்குன்றி தளர்ந்து போய்நிற்கின்றன.

இதற்குக் காரணம் என்ன? காரணம் யார்?

முதலில் யுத்தநிறுத்தம்; அடுத்து நல்லெண்ணப் புறச்சூழ்நிலையையும் பரஸ்பர நம்பிக்கையையும் கட்டி யெழுப்பும் நடவடிக்கைகள்; அதன்மூலம் மக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்தல்; அதனை எட்டிய பின்னர் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக்காணும் சமாதானப் பேச்சுக்கள் - இதுதான் அமைதி முயற்சிக்கான அட்டவணை.

இதைத்தான் கடந்த பலவருடங்களாக புலிகள் மீண்டும் மீண்டும் கூறிவந்தனர். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் நிலைப்பாட்டை வழமையாக வெளிப்படுத்தும்விதத்தில் அமைகின்ற மாவீரர் நாள் உரைகளில் தலைவர் வே.பிரபாகரன் திரும்பத் திரும்ப வலியுறுத்திவந்தார்.

அந்த அட்டவணை ஒழுங்கின் கீழான சமாதான முயற்சிகளுக்குத்தான் அவர் இணங்கினார். அதனடிப் படையில்தான் யுத்தநிறுத்தம் செய்யப்பட்டது; புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த அட்டவணைப்பிரகாரம் யுத்தநிறுத்தம் செய்யப்பட்டுவிட்டது.

ஆனால், அதற்கு அடுத்த கட்டமாக நல்லெண்ணப் புறச்சூழ்நிலையையும் தமிழ் - சிங்கள சமூகங்களிடையே பரஸ்பர நம்பிக்கையையும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில் முன்னேற்றம் இல்லை. அதனால்தான் சமரச முயற்சிகள் திட்டமிட்ட அட்டவணைப்படி முன்னேற முடியாது தடுமாறுகிறது.

நல்லெண்ணப் புறச்சூழ்நிலையை ஏற்படுத்தவும் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டி வளர்க்கவும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து புரிந்துணர்வு உடன்படிக்கையில் திட்டவட்டமான - தெளிவான - அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆனால், அவற்றைச் செயற்படுத்துவதில் அரசுத்தரப்பு பின்னடிக்கின்றது. இதுவே சமாதான முயற்சிகளுக்குத் தடையான - முட்டுக்கட்டை போடுகின்ற - விடயமாக அமைந்திருக்கின்றது.

தளர்ந்துபோயிருக்கும் சமாதான முயற்சிகளுக்குப் புத்துயிர்கொடுக்கும் நோக்கோடு நோர்வே அனுசரணைக் குழுவினர் நேற்றுமுன்தினம் வன்னியில் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்தபோது இந்த விடயத்தைத்தான் அவர் நோர்வேக் குழுவினரிடம் எடுத்துரைத்தார்; விளக்கினார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நிறைவேற்றவேண்டிய காலக்கெடு ஓகஸ்ட் 2ஆம் திகதியாகும்.

அந்தக் காலக்கெடுவுக்குள்தான் நிறைவேற்றுவதற்குக் கடமைப்பட்டுள்ள விடயங்களை அரசுத்தரப்பு நிறைவுசெய்ததன் பின்னரே சமாதான முயற்சிகள் இனிமேல் நகரும் என்பது தெளிவாக்கப்பட்டிருக்கின்றது.

சமாதான முயற்சி என்ற விளையாட்டில், பந்து தொடர்ந்தும் அரசின் களத்தில்தான். அரசு எப்படி அதை விளையாடப் போகின்றது என்பதில்தான் விளையாட்டின் போக்கு தங்கியுள்ளது.

# உலக இந்து மாநாடு விரைவில் நடத்தப்படும்!

## இந்து கலாசார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,ஜூலை17

உலக இந்து மாநாடு ஒன்றை விரைவில் இலங்கையில் நடத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த மாநாட்டை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள அமைப்புக்குழுமம் மேலும் ஒன்பது உபகுழுக்களும் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளன.

உலக இந்து மாநாடு தொடர்பாக இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு வெளியிட்ட செய்திக்குறிப்பில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

உத்தேச உலக இந்து மாநாடு நான்கு நாள்களுக்கு நடைபெறும். அது ஆங்கிலமொழியிலும் தமிழ்மொழியிலும் நடைபெறும். இந்துசமய வரலாறு, சமய நெறிகள், கிரியைகள், சடங்குகள், சமயதத்துவங்கள், கலாதத்துவம், கட்டடக்கலை, சிற்பக்கலை, நாட்டியம், ஓவியம், நீதி, நிர்வாகம், சமயநூல்கள் முதலிய சகல துறைகளிலும் கட்டுரைகள், ஆய்வு அறிக்கைகள் என்பன சமர்ப்பிக்கப்படும். அவை பின்னர் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்படும். நினைவு மலர் ஒன்றும் வெளியிடுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாநாடு நடக்கும் நாள்களில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். இந்து கலாசாரத்தினுடைய உன்னதமான கோலங்களை உலகத்தவருக்கு உணர்த்தும் வகையில் பலவகை நாட்டியங்கள், வாத்தியக்கச்சேரிகள், இசைக்கச்சேரிகள் ஒழுங்கு செய்யப்படும். அத்துடன் நாட்டார் கலைகளான கூத்து, கோலாட்டம், கும்மி முதலானவையும் இலங்கையில் உள்ள பல பிரதேச பாணிகளைப் பிரதிபலிக்கும் வகையில் அரங்கேற்றப்படும்.

அண்மைக்கால அனர்த்தங்களால் இந்து சமுதாயம் நலிவுற்று இருக்கின்ற இந்தச் சமயத்திலே, இந்து சமயத்தையும் அது தொடர்பான கலாசாரத்தையும் புனருத்தாரணம் செய்வதற்கான நடவடிக்கையாக உலக இந்து மாநாடு அமையும் - என்றுள்ளது.

இலங்கையில் முதன்முதலாக உலக இந்துமாநாடு ஒன்று 1982ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

### வடக்கு - கிழக்கின்

## கலாசார அலுவலர்களுக்கு திருமலையில் கருத்தரங்கு

### அடுத்த மாதம் நடக்கிறது

யாழ்ப்பாணம்,ஜூலை17

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் மூவின கலாசார உத்தியோகத்தர்களுக்கு அடுத்தமாதம் 8ஆம், 9ஆம் திகதிகளில் திருகோணமலையில் இருநாள் வதிவிடக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சும் இணைந்து இந்த கருத்தரங்கை நடத்தவுள்ளன.

மாகாணக் கலாசார உத்தியோகத்தர்கள் 56பேரும், மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர்கள் 9பேரும் இந்த வதிவிடக் கருத்தரங்கில் பங்குபற்றுவர்.

கருத்தரங்கு திருகோணமலை அபயபுரத்தில் உள்ள முகாமைத்துவ நிலையத்தில் நடைபெறும்.

இதேவேளை -

யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களும் இந்தக் கருத்தரங்குக்கு முதன்முறையாக அழைக்கப்பட்டுள்ளனர் என வடக்கு - கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி எஸ்.ஸ்ரீதேவி அறிவித்துள்ளார். (எ)

## வல்வெட்டித்துறை மீனவர்கள் காங்கேசன் கடலில் கைது!

யாழ்ப்பாணம்,ஜூலை17

வல்வெட்டித்துறையிலிருந்து கடலுக்குச் சென்ற மீனவர்கள் நால்வர் காங்கேசன்துறைக்கு அண்மையில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியைச் சேர்ந்தவர்களான இராசேந்திரம் சுரேஸ் (வயது 18), பொன்னம்பலம் பாலமுருகன் (வயது 15), துரைச்சாமி சிவசோதி (வயது 34), விசுவரத்தினம் ராகவன் (வயது 17) ஆகிய நால்வருமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை இயந்திரப்படகில் மீன்பிடிக்கச் சென்ற இவர்களை காங்கேசன்துறைக் கடல்பகுதியில் வைத்து கடற்படையினர் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நால்வரும் தமது படகில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த கடற்படையினர் அந்த மீனவர்கள் உயர்பாதுகாப்பு வலயத்துள் பிரவேசித்தனர் என்ற காரணத்தைக் காட்டி அவர்களைக் கைதுசெய்ததாகக் கூறப்படுகிறது.

பின்னர் அவர்களை கடற்படையினர் காங்கேசன்துறைப் பொலீஸாரிடம் ஒப்படைத்ததாகவும் -

தற்போது யாழ். சிறைச்சாலையில் அவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் - கைதானவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர். (ஒ-ரி)

### யாழ். பல்கலைக்கழகத்தின்

## வவுனியா வளாகத்தில் மாணவர் போராட்டம்

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக - பிரயோக விஞ்ஞானபீட மாணவர்கள் நேற்றுமுன்தினம் சில கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடத்தினர். இதனால், நிர்வாக செயற்பாடுகள் அங்கு ஸ்தம்பிதமடைந்தன.

தேவைகளை நிறைவு செய்யுமாறு நீண்டகாலமாக நிர்வாகத்திடம் வேண்டுகோள் விடுத்துவந்துள்ளதாகவும் -

அவை நிறைவேற்றப்படாமையினாலேயே போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆய்வுகூட வசதிகள் இல்லாமை, விரிவுரையாளர் பற்றாக்குறை, போதியளவு கணனிகள் இல்லாமை, இன்ரநெற் வசதி இல்லாமை மற்றும் பீடத்தில் புனரமைப்பு வேலைகள் நடைபெறாமை என்பவற்றை சுட்டிக்காட்டியே இப்போராட்டத்தை முன்னெடுத்ததாக மேலும் கூறப்பட்டது. (ஒ-9)

**நாளை**

ஆடி 02
வியாழக்கிழமை
(18.07.2002)
திதி : நவமி
முன்னிரவு 9.35 வரை
நட்சத்திரம்:சுவாதி
முன்னிரவு 10.03 வரை
கரிநாள்

| | |
|---|---|
| சுபநேரம் | : 10.30 - 11.00 |
| ராகுகாலம் | : 1.30 - 3.00 |

(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

ஒரேசமயத்தில் பல திசைகளில் செல்ல முயற்சிக்காதே!

## வை.எம்.சி.ஏ தேசிய சபையின் 3 நாள்கள் சிறுவர் பாசறை

### ஓகஸ்ட் மாதம் சிலாபத்தில்

யாழ்ப்பாணம்,ஜூலை17

வாலிப கிறிஸ்தவ சங்கங்களின் இலங்கைத் தேசிய சபை, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் மூன்று நாள் பாசறை ஒன்றை சிலாபம் சங்ஹிந்தியாவ பிரதேசத்தில் நடத்தவுள்ளது.

ஜப்பானின் ஒஸ்ரகா நகர வை.எம்.சீ.ஏயின் ஆதரவுடன் நடத்தப்படும் இப்பாசறை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதிமுதல் 14ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இது தொடர்பாக நிறைவேற்று செயலர் எவ்.ரி.பிரான்ஸிஸ் கூறுகையில்:-

சிறுவர்களின் வாழ்க்கை யுத்தத்தினால் பாதிப்படைவதுடன் முடிந்துபோவதில்லை. அவர்களின் எதிர்காலம் குறித்த எதிர்பார்ப்பு மற்றும் கொள்கை போன்றவற்றை வெளிப்படுத்தும் வகையில் இப்பாசறையை நடத்தவுள்ளோம். சகல வை.எம்.சி.ஏக்களினூடாகவும் சிறுவர், சிறுமியர்களைத் தெரிவுசெய்து நடத்தப்படும் இப்பாசறை வழமையைக் காட்டிலும் விநோதமான முறையில் நடத்தப்படவுள்ளது - என்றார். (ஒ-9)

## உடன்படிக்கையின் பின்னரும் 53 வீடுகள் முகாம்களாகின

### தென்மராட்சிப் பகுதியில்

தென்மராட்சி,ஜூலை17

புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட பின்னரும் தென்மராட்சிப் பிரதேசத்தில் 53 வீடுகள் படையினரின் தங்குமிடங்களாக அல்லது முகாம்களாக மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யுத்த சூழல் காரணமாக அப்பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் அங்கு அதிக எண்ணிக்கையில் மீள்குடியமர்வில் ஈடுபட்டுள்ளனர். இந்த சமயத்தில் வீடுகள் கையகப்படுத்தப்பட்டிருப்பது குறித்து அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நுணாவில் மத்தி (ஜே/307) கிராம அலுவலர் பிரிவில் வைரவர் கோயிலடியில் 18 வீடுகளும் -

கோகிலாக்கண்டி (ஜே/296) கேரதீவு வீதியில் 15 வீடுகளும்-

சாவகச்சேரி நகரம் (ஜே/300) தபாலக வீதியில் 6 வீடுகளும் -

டச்சு வீதியில் 5 வீடுகளும் -

நுணாவில் கிழக்கு (ஜே/305) சிவன் கோயில் அருகில் 5 வீடுகளும் -

கிராமாவில் (ஜே/320) புத்தூர் சந்திக்கு அருகில் 2 வீடுகளும் -

கெற்பேலி (ஜே/341), கெற்பேலி மேற்கு, கெற்பேலி மத்தி ஆகிய இடங்களில் தலா ஒரு வீடும் -

படையினரின் தேவைக்கு பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-1,1.7)

**இன்று ஆடி மாதப் பிறப்பாகும்**

## குவலயம் வியந்திட கும்மியடி

ஆடி இவளின்று ஓடி வருகிறாள்
அரணங்கே ஒன்றாய் கும்மியடி
கூடி இவள்தனை கூப்பி வரவேற்று
கூத்தாடிக் கூத்தாடிக் கும்மியடி
நாடி வருபவள் நன்மை விளைந்திட
நாரியரே ஒன்றாய் கும்மியடி
தேடிப்பல படை சென்று வந்தவர்
தேசத்தைக் காத்திட கும்மியடி
ஓடியோடி நாம் உருக்குலைந்தது
ஒழிந்ததென்றெண்ணி கும்மியடி
கூடித் தமிழினம் குதூகலித்தாட
குவலயம் வியந்திட கும்மியடி.

- விகடகவி.

## கிளிநொச்சி மருத்துவ முகாமில்

# இனங்காணப்பட்ட 42 பேருக்கு விழிவெண்படலச் சிகிச்சை

சண்டிலிப்பாய்,ஜூலை17

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் கிளிநொச்சி பொன்னம்பலம் ஞாபகார்த்த வைத்தியசாலையில் கடந்த மாதம் 16ஆம் திகதியன்று நடத்திய இலவச கண் பரிசோதனையின்போது விழிவெண்படலத்தினால்(கற்றாக்) பாதிக்கப்பட்ட 42 பேருக்கு யாழ். ஆஸ்பத்திரியில் அடுத்த மாதம் 8ஆம், 9ஆம், 10ஆம் திகதிகளில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

கண் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.குகதாசன் சத்திரசிகிச்சையை மேற்கொள்வார். மேற்படி 42 பேரும் வன்னியிலிருந்து யாழ். அழைத்து வரப்பட்டு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை மண்டபத்தில் தங்கவைக்கப்படுவர் என்றும் -

பின்னர் பகுதிபகுதியாக யாழ்.ஆஸ்பத்திரியில் நடைபெறும் சத்திர சிகிச்சைக்கு அழைத்துவரப்படுவர் என்றும்-

இவர்களுக்குத் தேவைப்படும் பராமரிப்பு வசதிகளை மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் செய்துகொடுக்க விருப்பதாகவும் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - கிளிநொச்சியில் கடந்த 16ஆம் திகதியன்று நடத்தப்பட்ட இலவச மருத்துவமுகாமில் 140 பேருக்கு கண்பரிசோதனை செய்யப்பட்டு இலவச மூக்குக் கண்ணாடிகள் அங்குவைத்து வழங்கப்பட்டதாக மேற்படி சேவைத்திட்டத்திற்குப் பொறுப்பான லயன் எஸ்.எஸ். தங்கராஜா தெரிவித்தார். (எ-135)


### YMCA JAFFNA

அங்கத்தவர்களுக்கான உள்ளரங்க விளையாட்டுப் போட்டி

- Badminton
- Carrom
- Chess
- Table Tannis
- Draughts.

விண்ணப்பப் படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி: 05.08.2002

*109, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*

செயலாளர், YMCA, யாழ்ப்பாணம்.

(6062)



### 99ஆவது பிறந்தநாள் வாழ்த்து



திரு.வே.அருணாசலம் தில்லையம்பலம்

17.07.2002

இன்றுபோல் என்றும் நீடூழி வாழ்க!

ஆலமரம்போல அவனிதனில் நீங்களும்தான் விழுதெறிந்து வலிமையோடு ஒரு நூற்றாண்டு காலம் இங்கிருந்து எங்களுக்கு இனிமை பயக்கின்ற தங்க நிலவே! தரங்குன்றாத் திரவியமே! தந்தையே! இன்றுங்களுக்குத் தொண்ணூற்றொன்பதாவதகவை ஐயா! நன்றாய் நலங்கண்டு நாட்டிலின்னும் பல்லாண்டு இன்புற்றிருந்திடவே எந்நாளும் நாங்கள் வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்மனையும், வல்வை ஸ்ரீவாலாம்பிகாதேவி சமேத ஸ்ரீவைத்தீஸ்வர சுவாமியையும், வல்வை நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையாரோடு, செல்வச் சந்நிதி முருகனையும் உளமார வேண்டி நின்று வாழ்த்துகின்றோம். வளமோடு வையகத்தில் வாழி வாழி வாழியவே!

வாழ்த்துபவர்கள்:

*"ஆனந்த பவான்", ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.*

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(6023)



### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 28 - 03 - 1914



விண்ணில் 17 - 06 - 2002

அமரர் அருளம்பலம் தர்மலிங்கம்

(உரும்பிராய் வடக்கு)

கருத்தினிற் கட்டு இன்றிக் களத்தினில் நிறுத்திய எந்தை
கருத்திழந்துற்றார் சுங்கு கதறலில் இலாபம் ஏது?
அள்ளி அணைத்த அழகு மலர்க்கையும் அன்று
கொள்ளியின் வெம்மையாலே கொடுநீறுமானது ஐயோ!

எமது தலைவரின் மரணச் செய்திகேட்டு உடன்வந்து உதவிகள் புரிந்தோருக்கும் இறுதிச்சடங்கில் கலந்து அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள், வர்த்தக ஸ்தாபனத்தினர் மற்றும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமிருந்தும் தொலைத்தொடர்புச் சாதனங்கள்மூலம் அனுதாபமும் ஆறுதலும் தெரிவித்தவர்களுக்கும் எமது அன்பையும் மனம் நெகிழ்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

*202, கிறுபுறி கார்டன், கொழும்பு - 04.*

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர் குடும்பத்தினர்.

(சி-22946)


## கைதடி பாடசாலைக்கு காலி அரச அதிபர் ரூ. ஒரு லட்சம் நிதி உதவி!

யாழ்ப்பாணம்,ஜூலை17

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்துள்ள கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்தைப் புனரமைக்கவென காலி மாவட்ட அரச அதிபர் ஒரு லட்சம் ரூபா நிதியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்தப் பாடசாலையைப் புனரமைப்புச் செய்வதற்கு 2 லட்சம் ரூபா நிதி தேவைப்படும் என்று அண்மையில் மதிப்பிடப்பட்டிருந்தது. இதனை அடுத்தே தனது பணத்தில் இருந்து ஒரு லட்சம் ரூபாவை அவர் இவ்வாறு வழங்கியுள்ளார். (ம-10)

## கமக்காரர் குழுக்கள் அமைக்க முயற்சி

மருதங்கேணிப் பிரதேசத்தில் கமக்காரர் குழுக்களை கிராம சேவையாளர் பிரிவுரீதியாக அமைத்து விவசாய நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இப்பகுதியில் மக்கள் மீளக்குடியேறியதனையடுத்து செம்பியன்பற்று, மருதங்கேணி, உடுத்துறை, வெற்றிலைக்கேணி, முள்ளியான், போக்கறுப்பு ஆகிய இடங்களில் கமக்காரர் குழுக்களை அமைப்பதற்கு அப்பகுதி விவசாய போதனாசிரியர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். (ம-182)

## கணனி கொள்வனவுக்கு நிதி கிடைத்தது

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் பாவனைக்கென புதிய கணனிகளைக் கொள்வனவு செய்வதற்கும் பழுதடைந்த கணனிகளைத் திருத்துவதற்கும் என ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபாவை தொழில்நுட்பக் கல்லூரி பயிற்சித் திணைக்களம் வழங்கியுள்ளது.

மேற்படி நிதியின் மூலம் முன்பு பாவனையில் இருந்து பழுதடைந்த 8 கணனிகளைத் திருத்தம் செய்வதற்கும் அவற்றிக்கு வேண்டிய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும் மேலும் புதிய கணனிகளைக் கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்லூரி அதிபர் எஸ். செந்தில்நாதன் தெரிவித்தார். (எ-ரி)

## ஊர்காவற்றுறையில் கணனிப் பயிற்சி

ஊர்காவற்றுறை,ஜூலை17

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கு கணனிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

ஆறு மாதங்களை கொண்ட இப் பயிற்சிநெறிக்கு முதலாவது அணியினர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான பயிற்சிகள் தற்பொழுது நடைபெற்று வருவதாகவும் -

பயிற்சிநெறிக்கு போதிய அளவு கணனிகள் இல்லாத காரணத்தால் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமே தற்பொழுது பயிற்சியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்றும் -

படிப்படியாக ஏனைய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர் என்றும் - கல்லூரி அதிபர் தெரிவித்தார். (எ-16)


### ST.JOHN'S COLLEGE JAFFNA

**ANNUAL PRIZE GIVING 2002**

Saturday the 20th July 2002
at 10.00 a.m.

*CHIEF GUEST*
Rt. Rev Duleep de Chickera
Bishop of Colombo
&
Mrs Geetha de Chickera

*CHAIRMAN*
Ven S.P.Nesakumar
Archdeacon of Jaffna

Parents, Old Boys & Well-wishers
are cordially invited.

(C/22902)

**Principal, Staff and Students.**



விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

### 2ஆவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



செல்வி வி.யனுஸ்யா

இல.74, காரைக்காட்டு வீதி, வண்ணார்பண்ணையில் வசிக்கும் திரு.திருமதி விஜயகுமார் - பாலறஞ்சினி தம்பதிகளின்

செல்வப் புதல்வி வி.யனுஸ்யா

தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று (17.07.2002) புதன்கிழமை அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார் மற்றும் சங்கத்தானையில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், மச்சாள் சஞ்சிகா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் அருளால் சகல சித்திகளையும் பெற்று பல்லாண்டுகாலம் சீருஞ்சிறப்புமாக நலமுடன் வாழ்கவென மனதார வாழ்த்துகின்றனர்.

*'யனுஸ்யா நகைத் தொழிலகம்', 74, காரைக்காட்டு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*


- அன்பு அப்பா, அம்மா, க.விஜயகுமார்- பாலறஞ்சினி தம்பதிகள்.

(6024)



பரம்பரை பரம்பரையாக மக்களின் நன்மதிப்பை பெற்ற ஆயுர்வேத தயாரிப்பு.

மூவ் பாம்




தசைவலி, தசைப்பிடிப்புகளிலிருந்து உடனடித்தீர்வு

மூட்டு வலிகளிலிருந்து உடனடி நிவாரணம்

விளையாட்டின்போது ஏற்படும் அனைத்து வலிகளுக்குமான முழுமையான நிவாரணி

இடுப்பு, முதுகு வலிகளிலிருந்தும் நிவாரணமளிக்கிறது

PARAS PRODUCT

விநியோகஸ்தர்
பார்ம்கோ மார்க்கடிங் சர்விசஸ் (பி) லிமிடெட் 074-814559

# வலிகாமம் கல்வி வலயம் தமிழ்மொழித் தினப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,ஜூலை17

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட தமிழ்மொழித்தின கலைத்திறன் போட்டிகள் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றன.

மேற்படி போட்டிகளில் கலந்து வெற்றியீட்டியவர்களின் பெயர், பாடசாலை விவரங்கள் வருமாறு:-

**வாசிப்பு**

*பிரிவு I*

முதலாம் இடம்:- பா.சிந்துஜா (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), இரண்டாம் இடம்:- க.ஞானசக்தி (ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்), மூன்றாம் இடம்:- இ.சுஜீவன் (நவாலி சென்.பீற்றர்ஸ் மகா வித்தியாலயம்).

*பிரிவு II*

முதலாம் இடம்:- யோ.கார்த்திகா (மகாஜனக் கல்லூரி), இரண்டாம் இடம்:- சி.சிந்து (இணுவில் மத்திய கல்லூரி), மூன்றாம் இடம்:- செல்வி த.தர்மசேகரம் (சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்).

**கதை கூறல்**

*பிரிவு I*

முதலாம் இடம்:- க.கம்ஷயன் (மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்), இரண்டாம் இடம்:- இ.பிரமிளா (மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம்), மூன்றாம் இடம்:- கே.பவப்பிரிய சர்மா (இணுவில் மத்திய கல்லூரி),

**பேச்சு**

*பிரிவு I*

முதலாம் இடம்:- ம.துளசி (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), இரண்டாம் இடம்- க.உஷாந்தன் (மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம்), மூன்றாம் இடம்:- சி.சாம்பவி (உடுவில் மகளிர் கல்லூரி).

*பிரிவு II*

முதலாம் இடம்:- செல்வி க.கிருஷ்ணா (மகாஜனக் கல்லூரி), இரண்டாம் இடம்:- தெ.சிவரூபன் (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), மூன்றாம் இடம்:- சி.கவிதா (பன்னாகம் மெய்கண்டான் வித்தியாலயம்).

*பிரிவு IV*

முதலாம் இடம்:- மு.குகலிங்கன் (பன்னாகம் மெய்கண்டான் வித்தியாலயம்), இரண்டாம் இடம்:- ந.வசுமதி (இராமநாதன் கல்லூரி), மூன்றாம் இடம்:- யே.ஜெயராசா (சில்லாலை றோ.க.த.க. பாடசாலை).

*பிரிவு V*

முதலாம் இடம்:- த.சுதர்சினி (மகாஜனக் கல்லூரி), இரண்டாம் இடம்:- க.கலையரசி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), மூன்றாம் இடம்:- சி.வின்சனா (வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி)

**பாவோதல்**

*பிரிவு I*

முதலாம் இடம்:- சு.வத்சலா (தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயம்), இரண்டாம் இடம்:- அ.அபிராமி (சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை), மூன்றாம் இடம்:- ம.சரண்யா (உடுவில் மகளிர் கல்லூரி).

*பிரிவு II*

முதலாம் இடம்:- சி.அபிராமி (வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி), இரண்டாம் இடம்:- க.பாலகாந்தன் (மகாஜனக் கல்லூரி), மூன்றாம் இடம்:- அ.மகிழினி (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்).

*பிரிவு III*

முதலாம் இடம்:- இ.துளசா (மகாஜனக் கல்லூரி), இரண்டாம் இடம்:- ஜெ.வைஷ்ணவி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), மூன்றாம் இடம்:- சி.நந்தகோபால் (வட்டு. மத்திய கல்லூரி).

*பிரிவு IV*

முதலாம் இடம்:- ச.சிவகாந்தன் (வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி), இரண்டாம் இடம்:- ம.லோகபரணி (மகாஜனக் கல்லூரி), மூன்றாம் இடம்:- இ.யாழினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

*பிரிவு V*

முதலாம் இடம்:- ம.திருவரங்கன் (வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி), இரண்டாம் இடம்:- இ.கோகிலா (இராமநாதன் கல்லூரி), மூன்றாம் இடம்:- பா.மகிஜினி (மகாஜனக் கல்லூரி).

**இசையும் அசைவும்**

*பிரிவு I*

முதலாம் இடம்:- செ.திவ்வியகரி (வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி), இரண்டாம் இடம்:- ம.மதுராஜினி (மானிப்பாய் விவேகானந்தா வித்தயாலயம்), மூன்றாம் இடம்:- த.யேவிதா (ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை).

**தனி இசை**

*பிரிவு II*

முதலாம் இடம்:- பொ.அனற்றினா (மானிப்பாய் சென்.ஆன்ஸ் பாடசாலை), இரண்டாம் இடம்:- ம.உமணன் (தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயம்), மூன்றாம் இடம்:- சி.அம்பிகா (இராமநாதன் கல்லூரி).

*பிரிவு III*

முதலாம் இடம்:- சி.வாசுகி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம்:- டு.சொரூபிகா (சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி), மூன்றாம் இடம்:- யோ.மேரிமலாஜினி (உடுவில் மகளிர் கல்லூரி).

*பிரிவு IV*

முதலாம் இடம்:- செ.சுபகரி (வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி), இரண்டாம் இடம்:- ஜெ.ரஜீவன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம்:- தே.டயானி (யூனியன் கல்லூரி).

*பிரிவு V*

முதலாம் இடம்:- த.சிலோஜினி (வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), இரண்டாம் இடம்:- அ.இமாலினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம்:- த.தமிழினி (இராமநாதன் கல்லூரி).

**தனி நடனம்**

*பிரிவு I*

முதலாம் இடம்:- ஜெ.வினோயா (வட்டு. மத்திய கல்லூரி), இரண்டாம் இடம்:- பு.சுகன்யா (சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்), மூன்றாம் இடம்:- த.நித்யா (இராமநாதன் கல்லூரி).

*பிரிவு II*

முதலாம் இடம்:- சி.பிரபூர்ணா (யூனியன் கல்லூரி), இரண்டாம் இடம்:- சி.சிவவேணுகா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), மூன்றாம் இடம்:- வி.தாட்ஷாயினி (மானிப்பாய் சென். ஆன்ஸ் வித்தியாலயம்)

*பிரிவு III*

முதலாம் இடம்:- சு.வாசுகி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), இரண்டாம் இடம்:- சி.சிவதாரணி (இராமநாதன் கல்லூரி), மூன்றாம் இடம்:- ரே.அனுஜா (வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்).

*பிரிவு IV*

முதலாம் இடம்:- வி.ஜீவிதா (யூனியன் கல்லூரி), இரண்டாம் இடம்:- ஆ.ஜீவிதா (இராமநாதன் கல்லூரி), மூன்றாம் இடம்:- ச.சுதன் (வட்டு. இந்துக் கல்லூரி).

*பிரிவு V*

முதலாம் இடம்:- கு.சுமங்கலை (வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி), இரண்டாம் இடம்:- கோ.கோமதி (இராமநாதன் கல்லூரி), மூன்றாம் இடம்:- செ.அனுஜா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி) (எ-86)

# ஓட்டோவில் யாழ். வந்த மாநகரசபை மேயர்

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ். மாநகரசபைக்கெனக் கொழும்பில் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட ஓட்டோவில் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார் மாநகர முதல்வர் செ.கந்தையன்.

கடந்த மாதம் 22ஆம் திகதி கொழும்பு சென்ற முதல்வர் அங்கு கொழும்பு, குருநாகல் மற்றும் நீர்கொழும்பு மாநகரசபைகளின் முதல்வர்கள் உட்படப் பலதரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தினார். பின்னர் கடந்த 12ஆம் திகதி மாலை அங்கிருந்து ஓட்டோவில் புறப்பட்டு மறுநாள் 13ஆம் திகதி சனிக்கிழமை இங்கு வந்து சேர்ந்தார்.

பஸ்மூலம் கொழும்பு சென்ற முதல்வர், மாநகரசபையின் நிதியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட புதிய ஓட்டோவிலேயே இங்கு வந்து சேர்ந்தார். (ம-10)

## உசன் கந்தசுவாமி கோயில்வரை

# யாழ். - மிருசுவில் பஸ் சேவையை நீடிக்குமாறு கோரிக்கை விடுப்பு

தென்மராட்சி,ஜூலை17

யாழ்ப்பாணத்திலிருந்து மிருசுவில் வரை நடத்தப்படும் பஸ் சேவையை உசன் கந்தசுவாமி கோயிலடிவரை நீடிக்குமாறு உசன் இராமநாதன் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர் வடபிராந்திய போக்குவரத்துச்சபை பொதுமுகாமையாளரைக் கடிதம்மூலம் கோரியுள்ளனர்.

பொதுமக்களின் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த மிருசுவிலிலிருந்து உசன் சந்தியூடாகக் கெற்பேலிக்குச் செல்லும் வீதி தற்போது பாவனைக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது.

அதேவேளை, இவ்வீதியூடாகப் பஸ்கள் சென்றுவர படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். எனவே, பஸ் சேவையை ஏற்கனவே நடைமுறையில் இருந்தது போன்று நடத்த வேண்டும்.

தற்போது காலை 8.15மணிக்கு மிருசுவில்வரைவரும் பஸ்ஸில்வரும் மாணவர்களும் ஆசிரியர்களும் சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரம் நடந்தே பாடசாலையைச் சென்றடைகின்றனர்.

எனவே, இந்த பஸ்சேவை நடத்தப்படின் அயற்கிராமங்களான விடத்தற்பளை, கெற்பேலி போன்ற இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களும் பயனடைவர்.

எனவே, தினமும் காலை 8.15 மணிக்கு மிருசுவில்வரைவரும் பஸ்ஸினையும், பி.ப. 2.45மணிக்கு மிருசுவிலிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் பஸ்ஸினையும் உசன் கந்தசுவாமி கோயில்வரை நீடிக்கவேண்டும்.

- என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

## கழிப்பறை பராமரிப்பு இல்லை

# முகமாலை செல்லும் பயணிகள் இயற்கைக்கடன் கழிப்பதில் அவதி

தென்மராட்சி,ஜூலை17

முகமாலைக்கு வரும் பயணிகள் இயற்கைக்கடன் கழிப்பதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இங்கு 18 அறைகளைக் கொண்ட ஆறு கழிப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளபோதிலும் அவை ஒழுங்காகப் பராமரிக்கப்படுவதில்லை என்றும் - இதனால் கழிப்பறைக்குச் செல்லும் பயணிகள் மூக்கைப் பொத்திக் கொண்டு வெளியேவரும் அவலநிலை தோன்றியுள்ளதாகவும் கூறப்பட்டது.

கழிப்பறைகளுக்கு அருகில் உள்ள தொட்டிகளில் தண்ணீர் வசதி உள்ளபோதிலும் கழிப்பறைகள் பராமரிப்பின்றிக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## மருதங்கேணிப் பகுதியில்

# உபதபால் நிலையம் இயங்காமையால் உதவிப்பணத்தை இழந்த குடும்பங்கள்

வடமராட்சிகிழக்கு,ஜூலை17

தாளையடி உபதபால் நிலையம் சொந்த இடத்தில் இயங்காமையினால் மருதங்கேணிப் பிரதேசத்தில் மீளக்குடியேறிய 16 வறிய குடும்பங்கள் கடந்த மாதத்திற்கான பொதுசன மாதாந்த உதவிப்பணத்தினைப் பெற முடியாமற்போய்விட்டது. அவர்களுககான பணம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

வடமராட்சியில், மந்திகையில் இயங்கிவரும் தாளையடி உபதபால் நிலையத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணத்தினை கடந்த காலங்களில் பெற்றுவந்த பல குடும்பங்கள் மருதங்கேணியில் மீளக்குடியேற்றம் ஆரம்பித்ததைத் தொடர்ந்து தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிவிட்டன.

ஆனால், தாளையடி உபதபால் நிலையம் இதுவரை சொந்த இடத்திற்கு இடமாற்றப்படவில்லை. இதனால், அப்பகுதியில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் கடந்த மாதம் தமக்கு வழங்கப்படும் பணத்தினைப் பெறமுடியாமல் போய் விட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-182)

# வாஜ்பாய் தலைமையிலான கூட்டத்தில் வைகோ கைதுக்குக் கடும் கண்டனம்

புதுடில்லி,ஜூலை17

பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நடந்த தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்கள் கூட்டத்தில் வைகோ கைதுக்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கைதுக்கு பாரதீய ஜனதா தலைவர்கள் இதுவரை கண்டனம் தெரிவிக்கவில்லை. அது மாநில அரசு சம்பந்தப்பட்ட விவகாரம் என்று கூறியிருந்தனர்.

ஆனால், பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி கூட்டத்தில் முதல் தடவையாக வைகோ கைதுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

துணைப் பிரமதர் அத்வானி, மதிய மந்திரிகள் ஜஷ்வந்த் சின்ஹா, ஜஸ்வந்த் சிங், முரசொலிமாறன் அர்ஜுன் சரண்சேத்தி, சரத்யாதவ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத் தீர்மான விவரங்களை தேசிய ஜனநாயகக் கூட்டணி அமைப்பாளர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நிருபர்களிடம் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:-

வைகோவை தமிழக அரசு 'பொடா' சட்டத்தின்கீழ் கைதுசெய்தது எங்களுக்கு மிகுந்த கவலையளிக்கிறது. இதுபோன்ற வழக்குகளில் பயன்படுத்துவதற்காக 'பொடா' சட்டம் கொண்டு வரப்படவில்லை. தீவிரவாத செயல்களில் ஈடுபடுகிறவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் இந்தச் சட்டம் இயற்றப்பட்டது.

'பொடா' சட்டத்தின்கீழ் பாதிக்கப்படுபவர்களுக்குத் தகுந்த பாதுகாபபு வழங்க நடவடிக்கை எடுப்பது குறிதது பரிசீலிப்போம். 'பொடா' சட்டத்தை திருத்துவது தொடர்பாகவும் ஆலோசிக்கப்படும்.

- இவ்வாறு ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூறினார். (ம)

## கிரிக்கெற் மத்தியஸ்தர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ். மாவட்ட கிரிக்கெற் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் உறுப்பினர்களுக்கான விசேட கலந்துரையாடல ஒன்று நாளை வியாழக்கிழமை மாலை 5மணிக்கு யாழ். இநதுக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-10)

## மோ.சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜூலை17

கடையின் முன்னால் நிறுத்திவிட்டு, கடையினுள் பொருள்கள் வாங்கச் சென்றவரின் மோட்டார்ச் சைக்கிள் இனந்தெரியாதவர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பஸ் நிலையப் பகுதியில் கடந்த ஞாயிறு அன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் தம்பசிட்டியில் வசிக்கும் தங்கப்பழம் என்பவருடைய யமாகமேற் மோட்டார் சைக்கிளே திருட்டுப்போனதாகும். (ம-15)



மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும் அண்மையில் நடத்திய வீதிஒழுங்கு மற்றும் முதலுதவிப் பிரிவு ஆகியவற்றுக்கான தேசியப்பாசறையின் இறுதிநாள் நிகழ்வுகள் யாழ்.புனித மரியாள் வித்தியாலயத்தில் நடைபெற்றன.

இந்நிகழ்வுகளில் கலந்துகொண்ட வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மாணவி ஒருவருக்கு விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்விழி கேடயம் வழங்குவதை முதலாவது படத்திலும் -

பாசறையில் கலந்துகொண்ட மாணவிகளில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம். சங்கத்தின் நல்லூர், கோப்பாய்ப்பிரிவு உதவி மாவட்ட ஆணையாளர் க.துஷ்யந்தனும் படத்தில் காணப்படுகின்றார். (எ-10)

# பயணக்கட்டணம் மீளளிப்பு

ஹெலிரூர்ஸ் நிறுவனம் இரத்மலானைக்கும் யாழ்ப்பாணத்துக்குமான விமான சேவை நடத்திய சமயம் பயணச் சீட்டுக்களைப் பெற்று பின்னர் பயணம் செய்யாதவர்களுக்குக் கட்டணம் மீளளிக்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து கட்டணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.சிவில் நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார். (எ-ரி)

# நயினாதீவில் பொதுக்கூட்டம்

நயினாதீவில் நீண்ட கால இடைவெளியின் பின்னர் பொதுக் கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

மணிமேகலை அரங்கில் நடந்த இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியற்றுறையினர் கலந்து கொண்டனர். விடுதலைப் புலிகளின் பிரமுகர் ரதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் நயினாதீவு கிராமிய அபிவிருத்தி சங்கத் தலைவர் ந.விசுவலிங்கம், தீவகக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. செம்மணன், யாழ். மாவட்ட அரசியல் துறையைச் சேர்ந்த தமிழ்விழி ஆகியோர் உரைநிகழ்த்தினர். இறுதியில் தமிழீழ இசைக் குழுவினரின் நிகழ்ச்சியும் இடம்பெற்றது. (ஒ-ரி)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் சக பணியாளர் **திரு.இ.விஜயகுமார்** அவர்களின் அன்புத் தந்தையார்

### சிவகுரு இராசையா

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள்,
கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
யாழ்.ப.நோ.கூ.சங்கம்.

*கே.கே.எஸ்.வீதி*
*யாழ்ப்பாணம்.* (6077)


## விற்பனைக்கு

Cannon LNP - 121S PHOTO COPY MACHINES

உதிரிப்பாகங்கள், டோன், டரம், LAMINATING MACHINES என்பவற்றை மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாணத்தில் நேரடியாக விநியோகிக்கப்படும்.

**ASIA PACIFIC TRADERS (PTD) LTD**
No.10, 1st, FLOOR,
J.T.COMPLEX,
385, GALLE ROAD, COLOMBO - 6
T.P.: 591285, 595811 FAX: 596663 (6073)


## ஆஸ்திரேலியா சிட்னி முருகன் கோயிலில் சிவாச்சாரியார் பதவி வெற்றிடம்

ஆஸ்திரேலியா சிட்னி முருகன் கோயிலில் சிவாச்சாரியார் பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிப்பவர்கள் மஹோற்சவம் உட்பட சகல கிரியைகள், அபிஷேகங்கள் மற்றும் எல்லாவிதமான விஷேசங்களையும் செய்யக்கூடிய தகுதி உடையவராகவும் ஆங்கிலம் பேசக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

வருடாந்தம் முப்பது ஆயிரம் ஆஸ்திரேலிய டொலர் வேதனமாக வழங்கப்படும். நல்ல சூழலில் கடமை செய்ய வாய்ப்பு உண்டு. நற்சாட்சிப் பத்திரங்கள், கல்வித் தகைமைகள், அனுபவங்கள், சுயவிவரங்கள் என்பவற்றுடன் 25.07.2002ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

தொடர்பு:
**விளம்பர இல.1570**
**மே/பா. உதயன்.**

(6069)

## இராஜகோபுரம் அமைக்கும் முடிவு

சாவகச்சேரி,ஜூலை17

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப்பிள்ளையார் ஆலயத்திற்கு இராஜகோபுரம் அமைக்க மேற்படி ஆலய திருப்பணிச் சபையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

மேற்படி இராஜகோபுர வேலைகளை மேற்கொள்ள பல லட்சம் ரூபா தேவை எனவும் -

நிதி அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் தம்முடன் தொடர்புகொள்ளலாம் என்றும் ஆலய முகாமையாளர் அறிவித்துள்ளார். (எ-31)

## தாளையடியில் எரிபொருள் விற்பனை நிலையம்

வடமராட்சி கிழக்கு,ஜூலை17

தாளையடியில் வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றினை அமைத்துள்ளது. அப்பகுதிக் கடலில் கடற்றொழிலாளர்கள் இயந்திரப் படகுகளை பயன்படுத்தி வருவதையடுத்து, எரிபொருள் தேவை அங்கு அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-182)

## பாடசாலைக்கு 4பரப்புக் காணி அன்பளிப்பு

கரவெட்டி,ஜூலை17

பருத்தித்துறைக் கடலில் மூழ்கி உயிரிழந்த சுந்தரலிங்கம் சிவோத்தமன் நினைவாக கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்துக்கு 4 பரப்புக் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

கரவெட்டியைச் சேர்ந்த இந்த மாணவனின் குடும்பத்தினர் வித்தியாலயத்துக்கு காணியை அன்பளிப்புச் செய்துள்ளனர். (ஒ-70)

## வலிகாமம் வலய ஆங்கில தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை17

வலிகாமம் கல்வி வலய, வலய மட்டத்திலான ஆங்கில தினப்போட்டிகள் இன்றும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை தனிப் போட்டிகளும், நாளை மறுதினம் குழுப் போட்டிகளும் இடம்பெறுமென்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-9)

## மலசலகூடங்கள் அமைப்பு

கொழும்புத்துறை,ஜூலை17

கொட்டடி மற்றும் நாவாந்துறைப் பகுதிகளில் 'யுனிசெவ்' உதவியுடன் மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றுக்காக தற்போது 38 மலசலகூடங்கள் கட்டப்படுகின்றன.

'யுனிசெவ்' நிறுவனம் வழங்கும் கட்டடப் பொருள்களைக் கொண்டு சுயமுயற்சி அடிப்படையில் இக்கழிவறைகள் அமைக்கபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-ரி)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவகுரு தங்கம்மா

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவகுரு தங்கம்மா நேற்று (16.07.2002) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தபால் அதிபர் தம்பிப்பிள்ளை சிவகுருவின் அன்பு மனைவியும் சந்திராதேவி, மகேந்திரன் (ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), விமலா, வசந்தா, சாந்தா ஆகியோரின் பாசமிகு தாயாரும் குமாரசாமி (மகாராஜா குறூப் - அங்கர், கொழும்பு), லிங்கேஸ்வரி, சுப்பிரமணியம் (லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்), ஜெயராசசிங்கம், இரத்தினராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரேந்திரா (மகாராஜா குறூப் - எஸ்லோன், கொழும்பு), சிபானி (கலைப்பீடம், பேராதனை), யாழினி (முகாமைத்துவபீடம் - யாழ்ப்பாணம்), பிரதீபன், வினோதா, பபிதா, நர்மதா, ஜெனிதா, ஜெசிதா, பிரதாப், பிரகாஷ், சங்கீதன், முரளீதரா, டிலக்ஷா, ரமேந்திரா, தர்ஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (17.07.2002) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய பொலீஸ் நிலையம் அருகில்,*
*சுன்னாகம்.* (6070)

தகவல்:
சி.மகேந்திரன் (மகன்)

## திருமதி தையல்நாயகி முருகுப்பிள்ளை

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தையல்நாயகி முருகுப்பிள்ளை அவர்கள் 13.07.2002 சனிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நடராசா - அமிர்தவல்லி தம்பதியின் மூத்த மகளும் காலஞ்சென்ற கந்தசாமி - தையல்முத்து தம்பதிகளின் மருமகளும் விமலேந்திரராணி, காலஞ்சென்ற ஜெயசோதிவேல், நிர்மலா, சக்திவேல் (கனடா), ஞானவேல் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாஸ்கரசுந்தரம், தேவிகாரமணி (இந்தியா), சிவானந்தம் (டுபாய்), லதாதேவி, விமலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுகன்யா ரவிசங்கர் (சுவிஸ்), நிசாஹரன், விமலஹரன், குகானந்தன் (லண்டன்), சங்கீதா, அன்பரசி, குகநேசன் (இந்தியா), சதீஸ்குமரன், சிவசெல்வன், சிவரூபன், சிவதர்சினி, ரகுபரன், சதுர்த்திகன், கீர்த்தனா, சாமினி ஆகியோரின் அன்புப் பேத்தியும் அஸ்வினியின் (சுவிஸ்) அன்புப் பூட்டியும் சிதம்பரநாயகி, சிதம்பரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தேவகுஞ்சரம், இராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான இரத்தினவடிவேல், அப்புசுந்தரம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2002) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்வெட்டித்துறை ஊறணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சில்லாலை ஒழுங்கை,*
*வேம்படி,*
*வல்வெட்டித்துறை.* (6081)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆறுமுகம் வேலாயுதம்பிள்ளை

*(முன்னாள் உரிமையாளர் AVP Textiles சுன்னாகம்)*

காரைநகர் வடக்கு, அல்வின் வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வேலாயுதம்பிள்ளை நேற்று முன்தினம் (15.07.2002) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னமுத்து தம்பதியினரின் அன்புப் புதல்வனும், ஞானாம்பிகையின் அன்புக் கணவரும், வினோதினி (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) அவர்களின் பாசமிகு தந்தையாரும், குமாரசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்றவர்களான கனகசபை, நவரத்தினம், நாகேஸ்வரி மற்றும் டாம்பிகாதேவி, ராஜேஸ்வரி, சந்திரசேகரம் (உரிமையாளர், விஸ்ணுகரன் சுன்னாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (18.07.2002) வியாழக்கிழமை காலை 8மணிக்கு பொறளை ஜெயரத்ன மலர்சாலையில் வைத்து இறுதிக் கிரியைகள் நடைபெற்று காலை 10 மணிக்கு பூதவுடல் கனத்தை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"விஸ்ணுகரன்"*
*ஐயனார் கோவிலடி, சுன்னாகம்.* (6080)

தகவல்:
ஆ.சந்திரசேகரம்
*(சகோதரன்)*


க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு குடும்பமாக பரிசுகளை வெல்லுங்கள்
க்லோகாட் ரயிலுடன் இன்றே இணையுங்கள்



முதலாவது அதிர்ஷ்டமடையும் குடும்பத்திற்கு
இரண்டாவதாக அதிர்ஷ்டமடையும் மூன்று குடும்பங்களுக்கு மூன்று பரிசுகள்
21" கலர் தொலைக்காட்சி, காஸ்குக்கர், பிளெண்டர், VCD பிளேயர் ஒன்று
விற்பனையாளர்களுக்கும் பரிசு
ஆறுதல் பரிசுகள்
முதலாவதாக அனுப்பிவைப்போருக்கு
(C/22945)
க்லோகாட்
Masters DDB LN: C 38/2002

# மிதிவெடி விழிப்புணர்வுக்கு

## 'நெஞ்சுறுத்தும் கானல்'

யாழ்.மாவட்ட மக்களை மிதி வெடிகள், வெடிபொருள்களில் இருந்து பாதுகாப்பதை நோக்காகக்கொண்டு ஒரு விழிப்புணர்வுச் செயற்றிட்டத்தை 'யுனிசெவ்' நிறுவனமும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து செயற்படுத்தி வருகின்றன. இத்திட்டம் நாடக ஆற்றுகையூடாக வெற்றிகரமாக செயற்படுத்தப்படுகிறது. இதற்காக 'நெஞ்சுறுத்தும் கானல்' என்ற நாடகம் தயாரிக்கப்பட்டு யாழ்.மாவட்



நாடகத்தில் ஒரு காட்சி.

டத்தில் உள்ள எழுபது பாடசாலைகளில் இதுவரை மேடையேற்றப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் ஒருவருடகாலத்துக்கு நடைபெறும். இதுவரை இந்த சேவையில் இருபது இளைஞர்கள் முழுநேரமாக ஈடுபடுகிறார்கள். யுத்த அனர்த்தம் மற்றும் மிதிவெடி அபாயம் மிக்க சாவகச்சேரிப் பகுதியில் அதிகமாக மேடையேற்றப்பட்ட இந்நாடகத்தை இதுவரை நாற்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட சிறார்கள் பார்த்து விழிப்புணர்வு பெற்றுள்ளார்கள். போரின்பின் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறியுள்ள சிறார்கள் இதன்மூலம் நன்மை அடைந்துள்ளார்கள். "நெஞ்சுறுத்தும் கானல்" நாடகத்தால், மிதிவெடிகள், வெடிபொருள்களால் ஏற்படும் பாதிப்புக் குறைந்துள்ளது எனலாம்.

### இதுவரை 70 பாடசாலைகளில் மேடையேறிய நாடகம்

நவீன நாடக உத்திகளையும், இசைப்பாடல்களையும், புதிய கல்விச் சீர்திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பங்குபற்றலூடான செயற்பாட்டையும் இந்நாடக ஆற்றுகை உள்ளடக்கியுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சர்வதேச நிறுவனங்களைச் சார்ந்த பலரும் இந்த நாடகத்துக்கு தமது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர். ஐரோப்பிய ஒன்றியத்தைச் சார்ந்த அனா ஒலி ரொக்ஸ், பிரான்ஸ் உயர் ஸ்தானிகராலய கலாசாரப் பிரிவு இயக்குநர் ஜீன் போல் பவுரே, பி.பி.ஸி. உலகசேவையின் கொழும்பு-2 பிரதிநிதி பிரான்ஸிஸ் ஹரிசன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

பி.பி.ஸி. நிறுவனம் இலங்கையில் மிதிவெடிகள் தொடர்பான ஆவணத் திரைப்படம் ஒன்றை அண்மையில் தயாரித்திருந்தது. அத்திரைப்படத்தில் "நெஞ்சுறுத்தும் கானல்" நாடகமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சி பி.பி.ஸி. உலகசேவையில் 'ஏசியா ருடே' நிகழ்ச்சியில் ஒளிபரப்பப்பட்டது. இத்தோடு அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த பிரானஸ் நாட்டைச் சேர்ந்த திரைப்பட இயக்குநர் சாமி பவல் என்பவரும் இந்நாடகத்தைத் தனது யாழ்ப்பாணம் தொடர்பான ஆவணப்படத்திற்காக பதிவு செய்து எடுத்துச் சென்றுள்ளார்.

**ஆட்டக்காரன்**

யதார்த்தத்தை அழகுணர்வோடு தெளிவாக மாணவர் மனதில் பதியக் கூடியதாகத் தகுந்த நேரத்தில் தயாரித்து மேடையேற்றுவது இந் நாடகத்தின் வெற்றிக்கு அடிப்படையென இந்நாடகத்தைப் பார்த்த பல பாடசாலை அதிபர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அண்மைக் கால நாடக வரலாற்றில் அதிக தடவை மேடையேற்றப்பட்டதும் அதிக பார்வையாளர்கள் பார்த்ததுமான நாடகமாக "நெஞ்சுறுத்தும் கானல்" நாடகத்தைக் குறிப்பிடலாம்.

☆

பொன்னாலை ஆலயத்துக்கு

# கிருஷ்ணரின் பத்து விக்கிரகங்கள் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டன

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமான் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்வதற்கென கிருஷ்ணரின் அவதாரங்களை வெளிப்படுத்தும் பத்து விக்கிரகங்கள் சித்தன்கேணியிலிருந்து பொன்னாலைக்கு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை கண்ணன் பஜனைக் குழுவினரின் நடை பஜனையுடன் விக்கிரக ஊர்வலம் நடைபெற்றது.

வழிநெடுகிலும் மக்கள் நிறைகுடம் வைத்து விக்கிரக வழிபாட்டை நடத்தினர்.

அன்றைய தினம் நண்பகல் அளவில் ஊர்வலம் ஆலயத்தைச் சென்றடைந்தது. இரண்டு லட்சம் ரூபா பெறுமதி மிக்க இவ்விக்கிரகங்களை பொன்னாலையைச் சேர்ந்த எஸ். சிவகுருநாதன் குழுவினர் நீர்கொழும்பில் இருந்து எடுத்து வந்துள்ளனர். (எ-28)

# பருத்தித்துறை மருத்துவமனையில் டாக்டர்கள், தாதியர் பற்றாக்குறை

கரவெட்டி,ஜூலை17

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் வைத்தியர்கள், தாதிகள் போதியளவு இல்லாதிருப்பதால் திருப்திகரமான மருத்துவ சேவையை வழங்கமுடியாதுள்ளது.

94 தாதிகள் கடமையாற்ற வேண்டிய இடத்தில் 33பேர் மட்டுமே கடமையாற்றுகின்றனர். 20 மருத்துவர்கள் கடமையாற்ற வேண்டிய இடத்தில் அதைவிடக் குறைவான எண்ணிக்கையிலேயே மருத்துவர்கள் உள்ளனர்.

இவ்வைத்தியசாலைக்கென 4 வைத்திய நிபுணர்களை அரசு நியமித்தபோதும் அவர்கள் நால்வரும் தென்பகுதிக்கும் மத்திய மாகாணத்திற்கும் மாற்றம்பெற்று சென்றுவிட்டார்கள் என மேற்படி வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி கவலை தெரிவித்தார். (ஒ-70)

## நாடக ஆற்றுகை

யாழ்ப்பாணம்,ஜூலை17

'நெஞ்சுறுத்தும் கானல்' என்ற மிதிவெடி விழிப்புணர்வு நாடகம் நாளை வியாழக்கிழமை காலை 11 மணிக்கு கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையில் மேடையேற்றப்படவுள்ளது.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு குடமியன் அ.த.க. பாடசாலையிலும் இந்நாடகம் நடத்தப்படவுள்ளது. (எ-9)

## கலந்துரையாடல்

அச்சுவேலி,ஜூலை17

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும்.

சமகால வேலைத் திட்டங்கள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படும் என்றும் -

எனவே சனசமூக நிலையங்களின் பணி நிலையில் உள்ளவர்கள் இதில் தவறாது கலந்துகொள்ளவேண்டுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் வலி.கிழக்கு கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்மறவன் கேட்டுள்ளார். (எ-11)

நீண்டகால இடைவெளியின் பின்னர்

# சுழிபுரம் திருவடிநிலை கடலில் 2 ஆயிரம் பேர் தீர்த்தமாடினர்

சுழிபுரம்,ஜூலை17

சுழிபுரம் திருவடிநிலைக் கடலில் நீண்ட நாள்களுக்குப் பின்னர் சுமார் 2 ஆயிரம் பக்தர்கள் தீர்த்தமாடினர்.

சுழிபுரம் பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலய தீர்த்த உற்சவம் நேற்று முன்தினம் திருவடிநிலை கடற்கரையில் நடைபெற்றது.

பல வருடங்களின் பின்னதாக இம்முறை கடலில் தீர்த்தமாட படையினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

எனினும், அப்பகுதிக்கு மக்கள் சுதந்திரமாகச் சென்றுவர படையினர் இன்னமும் அனுமதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-9-28)

மாகாண மட்டப் போட்டிகளுக்காக

# திருமலை சென்ற மாணவர் போதிய வசதியின்றி அவதி!

திருகோணமலை,ஜூலை17

வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற திருகோணமலைக்குச் சென்ற வெளிமாவட்ட மாணவர்கள் பலரும் பல்வேறு அசௌகரியங்களை அனுபவிக்க நேரிட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மாணவருக்கு உணவு வசதி கல்வித் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்படும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கூறியிருந்தாராம். ஆனால், இது குறித்து மாகாணக் கல்வித் திணைக்களத்தால் அறிவிக்கப்படவில்லை. இந்நிலையில், முல்லைத்தீவு மாணவர்கள் திருகோணமலையில் இரண்டு நாள்கள் உணவு வசதி இல்லாமல் பெருஞ்சிரமத்திற்கு உட்பட்டுள்ளனர். பின்னர் பொது மக்களின் வற்புறுத்தலுக்குப் பிறகே உணவு வசதி ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வெளிமாவட்ட மாணவர்கள் தங்குவதற்கு சில பாடசாலைகள் ஒதுக்கப்பட்டன. இப்போது பாடசாலைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் தங்கிய மாணவர்கள் காலை 7 மணிக்குள் தமக்குத் தேவையான பொருள்களை எடுத்துக்கொணடு பாடசாலையை விட்டு வெளியேறிவிட வேண்மென்று அறிவுறுத்தப்பட்டதாம். இதனால் தமக்கான போட்டிகள் இடம்பெறாத நாள்களில் பாடசாலை முடிவடையும் வரை அவர்கள் மர நிழல்களிலும் வீதி ஓரங்களிலும் காத்திருக்க நேரிட்டதாகவும் கூறப்படுகிறது.

இது ஒருபுறம் இருக்க எல்லே விளையாட்டுப் போட்டியில் சர்ச்சைக்குரிய தீர்ப்பின் காரணமாக செங்கலடி மத்திய கல்லூரியினருக்கும் திருமலை அபயபுர மகா வித்தியாலயத்தினருக்கும் இடையே மோதல் வெடித்தது. இதனால் அபயபுர சிங்கள மகா வித்தியாலயம் இரண்டு வருடங்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றக் கூடாது என்ற தடையை வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-290)

## புதிய கட்டடம் அமைப்பு

அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு 5 லட்சம் ரூபா செலவில் புதிய மாடிக் கட்டடம் ஒன்று நிறுவப்பட்டு வருகின்றன.

மூன்று மாடிக் கட்டடத்திற்கான முதற்றளம் 50 அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்டதாக நிறுவப்படுகின்றது. (எ-11)

நிரந்தரத் தீர்வு எட்டப்படும் வேளையில்

# வைகோவின் கைது கவலை அளிக்கிறது!

## இந்துசமயப் பேரவை தமிழக முதல்வருக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,ஜூலை17

ஈழத்தமிழர் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம் நிரந்தரத் தீர்வு எட்டப்படுவதற்கான முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் ஈழத் தமிழருக்காக சர்வதேச ரீதியில் குரல் கொடுத்துவரும் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ கைதுசெய்யப்பட்டமை எமக்கு ஆழ்ந்த கவலையை அளிக்கிறது.

- இவ்வாறு யாழ்.இந்துசமயப் பேரவை, தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

துரதிர்ஷ்டவசமாக எமது நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை தமிழ், சிங்கள மக்களை இரத்த வெள்ளத்தில் நீந்த வைக்கிறது. தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளை இலங்கையரசு வழங்காத காரணத்தினால் எமது தமிழ்த் தலைவர்கள் சாத்வீக ரீதியான போராட்டங்களை நடத்தினர். அவை தோல்வியில் முடிந்ததால், தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தாங்கிய போராட்டத்திற்குத் தள்ளப்பட்டனர். இப்போராட்டத்தில் இலங்கைத்தீவில் வாழும் தமிழ் மக்களும், சிங்கள மக்களும் பேரிழப்புக்களைச் சந்தித்துள்ளனர்.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கப் போராடி வந்த பல அமைப்புக்களில் விடுதலைப் புலிகள் அமைப்பு அந்த இலக்கை அடைவதில் உறுதியாக இருந்து வருகின்ற காரணத்தினால், தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் மனம் திறந்து பேச வேண்டும் என்ற யதார்த்தத்தை இன்று முழு உலகே ஏற்றுவிட்டது. இந்த சூழ்நிலையில் வைகோ ஈழத்தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்காகத் தம்மால் இயன்ற தியாகங்களைச் செய்து வருபவர். அவரைத் தங்கள் அரசு கைது செய்துள்ளமை முழு தமிழ் உலகுக்கும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. தங்களின் இந்த முடிவு இலங்கைவாழ் மக்களை மட்டுமல்லாது சிங்கள மக்களையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## பூசை வழிபாடு ஆரம்பம்

கடந்த இரண்டு வருடங்களின் பின்னர் சாவகச்சேரி புனித பிகோரியார் தேவாலயத்தில் ஞாயிறு திருப்பலி பூசைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8மணிக்கு திருப்பலி பூசை ஒப்புக்கொடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலய சுற்றாடலைச் சேர்ந்த மக்கள் அண்மையில் வன்னியிலிருந்து மீளக் குடியமர்ந்ததையடுத்து, பங்கு மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க திருப்பலி பூசைகள் ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தப்படுவதாகவும்-

ஓகஸ்ட் மாதம் தேவாலய நவநாள் உற்சவம் நடத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# மாணவர்களுக்கான சீருடை கோரி பெற்றோரே விண்ணப்பிக்க வேண்டும்

## எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர்

அச்சுவேலி,ஜூலை17

இலவச சீருடை தேவையான மாணவர்களின் பெற்றோர் அதற்கான விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்கள் ஊடாக, தத்தமது பிரதேச செயலருக்கு எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் (2003ஆம் ஆண்டு) முதல் இலவசச் சீருடைகள் விருப்பத்தின் பேரில் விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு மட்டும் வழங்கப்படவுள்ளன.

சீருடை பெறவிரும்பும் [illegible] களின் பெற்றோர் [illegible] பத்தை இரண்டு பிரதிகளில் [illegible] சாலை அதிபரின் சிபார்சுடன் தாம் வசிக்கும் பிரதேசத்தில் உள்ள பிரதேச செயலகத்தில் ஒப்படைக்க வேணடும்.

பிரதேச செயலர்கள் அரச அதிபர்கள் ஊடாக கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களுக்கு மட்டும் சீருடை பெறுவதற்கான விசேட முத்திரைச் சீட்டுக்கள் வழங்கப்படும்.

முத்திரைச் சீட்டுக்களை பல நோ.கூ. சங்கங்களில் சமர்ப்பித்து சீருடைத் துணிகளைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சீருடை பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கு வருமானக் கட்டுப்பாடு [illegible] எதுவும் விதிக்கப்படவில்லை [illegible] விரும்பியவர்கள் விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பாடசாலைகள் கோட்ட, வலயக்கல்வி [illegible] கங்கள் மூலம் எல்லா மாணவர்களுக்கும் இலவச சீருடைகள் வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## புதிய சந்தை திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ். மாநகர சபையினால் புதிதாக அமைக்கப்பட்ட [illegible] புதிய சந்தை எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.[illegible] மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

மாநகர முதல்வர் செ.[illegible]நயன் சந்தையைத் திறந்து வைப்பார். இந் நிகழ்வில் மாநகரசபை உறுப்பினர்களும் பொதுமக்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-10)



# சில சமயங்களில்....

குரங்கில் இருந்துதான் மனிதன் தோன்றினான். அதாவது குரங்... மனி... மூதாதைகள் ஒன்றே என்கிறார்கள் விஞ்ஞானிகள். மிக அண்மையில் இதனை உறுதிப் படுத்தும் வகையிலான மிகப் பழைய மண்டையோடு ஒன்றை விஞ்ஞானிகள் கண்டு பிடி...கனறார்கள்.

நாம் இங்கே பார்க்க வந்தது அதுவல்ல. அசப்பில் குரங்கைப் போன்ற தோற்றமுள்ள சிறுவன் பற்றியே; அவனையே படத்தில் காண்கிறீர்கள்.

இந்த 6 வயதுச் சிறுவனின் பெயர் அப்லே. கஜகஸ்தான் நாட்டில் சீன எல்லைக்கு மிக அருகே உள்ள மலைவாசிகள் கிராமம் ஒன்றில் வாழ்கின்றான். தலைமுதல் உள்ளங்கால் வரை உடல் முழுவதும் கருமையான முடியுடன் முட்டை வடிவ மண்டையோடு, குரங்கு முகம் என இவன் பார்ப்பதற்கு குட்டி மனிதக் குரங்கு போன்றே இருக்கின்றான்.



இவனது இந்தத் தோற்றத்துக்கு அணுக்கதிர் வீச்சு அல்லது பரம்பரைக் கோளாறு காரணமாக இருக்கலாம் என்கின்றனர் மருத்துவர்கள்.

அல்பேயின் தாயிடம் அவரது அயலவர்கள் "உன் மகனை ஏதாவது சர்க்கஸ்"க்கு அனுப்பலாமே" ... கிண்டல் செய்கிறார்களாம். வேதனையில் வெந்து போகிறார் அந்தத் தாய். தன்மகனைப் பாடசாலைக்கு அனுப்பவேண்டும் என்பது அவரது விருப்பம்.

ஆனால், மற்றவர்கள் அவனை அதிகம் கேலி செய்வதால் அது சாத்தியப்படவில்லை என்று வேதனையுடன் கூறுகிறார் தாயார்.

சிலவேளைகளில் கடவுள் தன் இஷ்டத்துக்கு மனிதனின் வாழ்க்கையில் விளையாடிவிடுவது என்பது இ...

# ரீவி - ஷேர்ட்

ரீ-ஷேர்ட (T-Shirt) கேள்விப்பட்டு இருக்கிறீர்கள். ஆனால், ரீ.வி-ஷேர்ட் (T.V - Shirt) பார்த்து இருக்கிறீர்களா? பார்த்திருக்க மாட்டீர்கள். ஏனெனில் அதற்காக நீங்கள் பிரான்ஸ் நாட்டுக்குச் செல்ல வேண்டியிருக்கும்.

அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட உடையாக அணிந்துகொள்ளக் கூடிய கணனி போன்ற ... தான் இந்த ரீ.வி. ஷேர்ட்டும். அதாவது ... கொண்டால் அதில் தொலைக்காட்சி(T ... லாம்.

'பிளாஸ்டிக் ... பைபர்ஸ்' என்னும் ஒருவகை இரசாயன இழைகளால் இந்த ஆடை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆடையை தொலைக் காட்சித் திரை போன்று இயங்கச் செய்ய முடியும்.

பிரான்ஸ் நாட்டின் தொலைத்தொ...த் துறையின் ஆராய்ச்சியாளர்கள் இந்த ஆடையைத் தயாரித்துள்ளனர்.

ஆடை அலங்கார பாஷன் துறையில் இந்த ரிவி-ஷேர்ட்கள் புதிய அத்தியாயம் படைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.





# இதிலும் முதலிடம்....



மக்கள் தொகையில் உலகிலேயே முதலிடம் சீனாவுக்குத்தான் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். தெரியாத ஒன்றிலும் சீனாவுக்குத்தான் முதலிடம். புகைப் பழக்கத்திற்கு அடிமையானோரின் எண்ணிக்கையிலும் அதற்கு முதலிடம் உண்டு.

இந்தப் பழக்கத்தால் பலியாவோரின் எண்ணிக்கையும் அங்கு மிக வேகமாக அதிகரித்து வருகிறது. இதனால் அதிர்ச்சியடைந்த சீன அரசு புகைப் பழக்கத்தைத் தடுக்கவும் குறைக்கவும் தீவிர நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இதற்காக நாடுமுழுவதும் புயல்வேகப் பிரசாரங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. குறிப்பாக இளைய சமூகத்தினர்தா... இந்தப் பிரசாரத்தின் இலக்கு.

இங்கே, சீன சுகாதார அதிகாரி ...வர் புகையின் தாக்கத்தால் செத்துமடியும் எலிகளைக் காண்பித்து புகைத்தலின் கெடுதி குறித்து மாணவ, மாணவிகளுக்கு விளக்குகின்றார்.

# அட! அப்படியா!!

இப்போதெல்லாம் சாதனைகள் செய்து கின்னஸில் இடம்பிடிப்பது என்பது ஒன்றும் அவ்வளவு சிரமமான காரியமில்லை. அதற்காக நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் மற்றவர்கள் இதுவரை செய்யாத - அர்த்தமற்ற - சின்னச்சின்ன விடயங்களைப் பெரிய அளவில் செய்வதுதான்.

இங்கே பாருங்கள் இதுவும் ஒரு சாதனை முயற்சிதான். என்ன என்று தெரிகிறதா? ஒருவர் காலை மற்றொருவரின் காலுடன் கயிற்றினால் பிணைத்து விட்டு அனைவரும் ஒன்றாக நகர்ந்து 50 மீற்றர் தூரத்தைக் கடப்பதுதான் இவர்களின் சாதனை முயற்சி. கடந்த ஞாயிறன்று ஹொங்கொங்கில் நடைபெற்றது. 684 போட்டியாளர்கள் இதில கலந்துகொண்டனர். 10 நிமிடம் 59 செக்கன்களில் அவர்கள் தமது இலக்கை அடைந்தார்கள். கின்னஸில் இது - சாதனையாகப் பதிவாகுமா என்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.



# இதுவும் சாதனைதான்

*தயாரிப்பு: கனிமொழி*

# நேனோ துளைகளில் தகவல் பதிவு

## பல வருட ஆராய்ச்சியால் கிடைத்திட்ட பயன்

ஐ.பி.எம். நிறுவன ஆராய்ச்சியாளர்கள் ஒரு பிளாஸ்ரிக் துண்டில் துளைகளைப் போட்டு தரவுப் பதிவில் (data storage) ஒரு புதிய முறையை உருவாக்கியிருக்கின்றார்கள். இந்தத் துளைகள் ஒரு மனித மயிரை விட 6,000 மடங்கு சிறியவை.

ஒரு டாம்பசை பிளாஸ்ரிக் துண்டில் ஒருடெராபிட் (100 கிகா பைட்) தகவலை டோர் செய்யமுடியும் என்கிறார்கள் ஐ.பி.எம். ஆராய்ச்சியாளர்கள். இந்த ஆராச்சி சுவிஸ்லாந்தில் இருக்கும் சூரிச்சில் ஆறு வருடம் நடத்தப்பட்டது.

பதிவுசெய்யப்பட்ட டேட்டா, துல்லியமான, மிகமிகச்சூடான ஒரு நுண்-ஊசியால் (nano - needle) போடப்பட்ட ஒரு லட்சம் கோடி துளைகளின் வடிவில் இருக்கும் என்கிறார்கள் அந்த ஆராய்ச்சியாளர்கள்.

கணனிகளில் இருக்கும் டிஸ்டிரைவ்கள், கையடக்க கணனிகளிலும் டிஜிட்டல் காமிராக்களிலும் இருக்கும் ஃபிளாஷ் மெமரி கார்ட்கள் ஆகியவை ஆக்கிரமிக்கும் டேட்டா டோரேஜ் உலகில் துளைகளில் தகவலை சேமிப்பது என்பது கொஞ்சம் பழைய உத்திதான்.

இருந்தாலும் ஐ.பி.எம்க்கு முன் இருந்த ஒரு நிறுவனம் 110 வருடங்களுக்கு முன் கணனி பன்ச் கார்டுகளை உருவாக்கி உலகையே கலக்கியது.

"மெக்கானிக் உலகின் எதிர்காலத்திற்குத் திரும்பிப் போகவேண்டும் என்பது எங்கள் தாரக மந்திரம்" என்றார் மில்லிபீட் (Millipede) என்ற இந்த புரஜெக்ட்டின் தலைவர் பீட்டர் வெட்டிகர். அவர் சொல்லும் துளைகள் 10 நேனோ மீட்டர் அளவு கொண்டவை. ஒரு நேனோ மீட்டர் என்பது ஒரு மீட்டரில் ஒரு மீட்டரில் 100 கோடியில் ஒரு பங்கு! கிட்டத்தட்ட 300 கோடி துளைகளை ஒரு பன்ச் கார்ட் துளையில் பொருத்த முடியும்.



பொதுவாக கணனிகளில் தகவல் 0,1 என்ற பைனரி முறையில் மாற்றப்படுகிறது. ஆனால், இந்தப் புதிய டோரேஜ் முறையில் அது புள்ளிகளாகவும் கோடுகளாகவும் மாறுகிறது. புதிய சில்லுகளில் இருக்கும் துளைகளிலும் தட்டைப் பரப்புகளிலும் இந்த முறைதான் வரப்போகிறது.

இந்த பிளாஸ்டிக் ஒரு சிலிக்கன் தகட்டில் பொருத்தப்பட்டிருக்கும். அதன் மேல் சுமார் 1,000 "ஃபோனோகிராஃப்" கைகள் இருக்கும். அவற்றின் முனையில் ஊசிகள் இருக்கும்.

ஃபோனோகிராஃப் கைகள் இரண்டு விதமான பொருள்களால் தயாரிக்கப்படுகின்றன. இந்த இரண்டு பொருள்களும் வெப்பத்தை வெவ்வேறு விதமாகக் கையாளுகின்றன. 400 டிகிரி சென்டிகிரேட் வெப்பத்தில் ஒரு பகுதி மற்ற பகுதியைவிடப் பெரிதாக விரிவடைகிறது. இப்படியாக அது வெப்பத்தில் வளைந்து அதன் சூடான ஊசிகளை அந்த பிளாஸ்டிக்கில் செலுத்தி துளைகளைப் போடுகிறது.

பிறகு இரண்டாவது முறையாக இன்னொரு பக்கத்தில் துளை போட்டு அந்தப் பொருள் சூடாக்கப்படும். முதலில் போடப்பட்ட துளை இந்த விதமாக நிரப்பப்படும். இதன் மூலம் ஒரு சில்லில் தகவலை மறு பதிவு (rewrite) செய்யலாம்.

தகவலைப் படிக்க அந்த ஊசிகள் 100 டிகிரி குறைவான வெப்பத்தில் சூடாக்கப்படுகின்றன. எனவே ஃபோனோகிராஃப் கைகளையும், ஆனால் பிளாஸ்டிக் உருகாமல் பத்திரமாக இருக்கும். ஊசிகள் அந்தப் பரப்பிற்கும் அதற்கு அடியில் இருக்கும் பரப்புக்கும் இடையிலிருக்கும் இடைவெளியை அளந்து பார்க்கிறது.

இது அவ்வளவு வேகமாகத் தகவலைக் கொண்டு வராது என்றாலும் குறைந்த மின்சக்தி கொண்ட மொபைல கருவிகளுக்கு ஏற்றது என்றார் வெட்டிகர்.

இருந்தாலும் இந்த நேனோ தொழில்நுட்ப பன்ச் கார்ட் அதிவேக கணனி நெட்வேர்க்குகளில் தகவலை வேகமாகக் கடத்துகிறது என்று ஐ.பி.எம். தெரிவித்தது. கூடுதல் மின் சக்தி இருந்தால் இதற்கான சில்லுகள் இன்னும் வேகமாக தகவலைப் பரிமாறும் என்றார் வெட்டிகர்.

*- நன்றி 'வெப்'.*



# ஜனாதிபதி தேர்தலில் வைகோ வாக்களிப்பு

'பொடா' சட்டத்தில் கைதாகி வேலூர் சிறையில் இருக்கும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நேற்றுமுன்தினம் பிற்பகல் குடியரசுத தலைவர் தேர்தலில் வாக்களித்தார்.

வைகோ பொலீஸ் வானில் சென்னை தலைமைச் செயலகத்துக்கு அழைத்து வரப்பட்டார். வானை விட்டு இறங்கிய வைகோ வாக்களிக்கும் அறைக்கு விரைந்தார். அவரது முகம் சற்று சோர்வாகக் காணப்பட்டாலும் வேகமான நடையில் மாற்றமில்லை.

தேர்தல் நடைபெறும் குழுக்கள் கூடும் அறைக்குள் சென்ற அவர் வாக்களித்து உடனே வெளியில்கிளம்பினார்.

வெளியில் வந்த அவரிடம் சில நிருபர்கள் பேச முற்பட்டனர். ஆனால் வைகோ எதுவும் பேசாமல் வானில் ஏறிக் கிளம்பிவிட்டார். எல்லாம் ஏழு நிமிடங்களிலேயே முடிந்துவிட்டது. (ஒ)

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம்,ஜூலை17

பேராசிரியர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரன் ஞாபகார்த்த நினைவுப் பேருரை நாளை மறுதினம் வெள்ளிக கிழமை மாலை 3 மணிக்கு யாழ்பல் கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வவுனியா வளாக முதல்வர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் பனைவளம் தொடர்பாக உரையாற்றுவார். (ஒ-9)




இந்திய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் வாக்களிக்கும் வைகோ.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை17

வலிகாமம் கோட்டத்தில் சங்கானை, சண்டிலிப்பாய் கோட்டங்களிலும் தெல்லிப்பழை, உடுவில் கல்விப் கோட்டங்களில் கே.கே.எஸ். வீதிக்கு மேற்குப் புறமாக உள்ளதுமான தனியார் கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் இன்று மாலை 4 மணிக்கு சண்டிலிப்பாய் ஐயனார் கோயிலடியில் உள்ள அரசியல்துறை அலுவலகத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# மேட்டுநில பயிர்ச்செய்கையில் ஈடுபட விவசாயிகள் தயக்கம்!

## மிதிவெடி அபாயம் காரணம்

தென்மராட்சி,ஜூலை17

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள இடங்களின் சில பகுதிகளில் மேட்டு நிலபயிர்ச்செய்கையில் ஈடுபட அப்பகுதி விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். விவசாய நிலங்கள் படையினர் கட்டுப்பாட்டில் இருந்ததால் அங்கு மிதிவெடிகள், கண்ணிவெடி கள் இருக்கலாமென்ற அச்சத்தில் விவசாய நடவடிக்கையினை மேற்கொள்வதில் விவசாயிகள் பின்னடித்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரியில் ஆயிரத்து 679 ஹெக்ரேயரிலும், மந்துவில் மேற்கில் 25 ஹெக்ரேயரிலும், மீசாலை இராமாவில் பகுதியில் 16 ஹெக்ரேயரிலும், மீசாலை வடக்கு வேம்பிராயில் 350 பரப்பிலும் விவசாய நடவடிக்கை மேற்கொள்ள விவசாயிகள் தயக்கம் காட்டிவருகின்றனர்.

இதேவேளை இயற்றாலைப் பகுதியில் மல்லிக்கிராய் வயல்நிலம் விவசாயம் மேற்கொள்ளமுடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளதாகவும் - வயல்வெளியில் படையினரின் போக்குவரத்து வீதி உள்ளதால் அங்கும் விவசாய நடவடிக்கை மேற்கொள்ளமுடியவில்லை எனவும்- தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)


நல்லூர் றோட்டரக்ட் கழகத்தின்

**சின்னஞ்சூட்டு வைபவமும் 'மனிதம்' சஞ்சிகை வெளியீடும்**

நல்லூர் றோட்டரக்ட் கழகத்தின் 2ஆவது நிர்வாகசபை பதவியேற்பு வைபவமும், சஞ்சிகை வெளியீடும் புதிய தலைவர் Rtr.K.தேனுகா தலைமையில் நடைபெறவுள்ளன.

*பிரதம விருந்தினர்:* Rtn N. வன்னியசிங்கம் (உபதலைவர்,யாழ்.றோட்டறிக் கழகம்)

*இடம்:* மெதடிஸ்த திருச்சபை (ஓட்டுமடம் சந்தி)

*நாள்:* இன்று (17.07.2002) புதன்கிழமை

*நேரம்:* பிற்பகல் 2.00 மணி (புதிய நேரம்)

றோட்டறிக் குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(C/22965) - செயற்றிட்ட இயக்குநர்.



**வீடு வாடகைக்குத் தேவை**

கொழும்பினைத் தலைமையகமாகக் கொண்டதும் சர்வதேசத் தொடர்புடையதுமான பிரபல கணக்காய்வு நிறுவனத்தின் கிளை அலுவலகத்தினை நிறுவுவதற்கு யாழ்ப்பாணம் நகரத்திலிருந்து 1Km சுற்று வட்டத்திற்குள் உள்ள, 1000 சதுர அடி விஸ்தீரணமுள்ள, நல்ல நிலையில் உள்ள வீடு உடனடியாக வாடகைக்குத் தேவை.

*தொடர்புகளுக்கு:*
விளம்பர இலக்கம்:- 1571
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(C/22962)


**கண்ணீர் அஞ்சலி**

கொழும்புத்துறையைச் சேர்ந்தவரும் எமது ஆலயத்தில் உதவி அர்ச்சகராகப் பணிபுரிந்து வந்தவருமான

பிரம்மஸ்ரீ

**நடராஜக் குருக்கள் இராமச்சந்திர சர்மாவின்**

மறைவு கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.

அன்னாரின் மறைவால் இன்னலுறும் அவரது குடும்பத்துக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய கைலாசபிள்ளையாரை இறைஞ்சுகின்றோம்.

கைலாசபிள்ளையார் கோயில், நல்லூர். (C/22966) கே.மணிக்குருக்களும் குடும்பத்தினரும்.

ஸ்கந்தாவின்

**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரி சிரேஷ்ட ஆசிரியர் திரு.சி.[illegible] அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தங்கம்மா சிவகுரு**

அவர்களின் மறைவு குறித்து துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியுற இறைவனை இறைஞ்சுகிறோம்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை, சுன்னாகம். (6083) அதிபர், ஆசிரியர் கழகம்.

**கண்ணீர் அஞ்சலி**

எமது கமநல சேவைகள் நிலையத்தில் இலிகிதராக கடமைபுரியும் **திரு.வே.பி.சண்முகநாதன்** அவர்களின் அன்புத் தந்தையாராகிய

**அமரர் வேலர் பிள்ளையார்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கிறோம்.

கமநல சேவைகள் நிலையம், புத்தூர். (6084) உதவி ஆணையாளர், கமநல சேவைக்குழு உறுப்பினர்கள், நிலைய உத்தியோகத்தர்கள்.


**எமது புதிய வெளியீடு**

விக்ரம், நாசா நடித்த

✪ சாமுராய்

வீடியோ சிந்து

(6089) உரும்பிராய்.



எழுதுவினைஞர் பரீட்சை வழிகாட்டி!

பொது உளச்சார்பு, மொழித்திறன்

ஆக்கம்: V.A. சிவராசா

கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ். (6082)



**தையலுக்கு ஆள்கள் தேவை**

கைலாசபிள்ளையார் கோவிலுக்கு முன்பாக உள்ள தையற்கடைக்கு பெண்கள் தேவை. நேரில் வரவும்.

*தொடர்பு:-* இ.சகிலா, நாவலர் றோட், நல்லூர் தெற்கு.(6079)



**நிறைஞ்சனாஸ்** சங்கானை

ரஜனி, சிவாஜி, செளந்தர்யா நடித்த

**படையப்பா**

காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்) (C-22944)



**ராஜா** யாழ்ப்பாணம்.

அஜீத், ஜோதிகா, வடிவேல், ராதாரவி நடித்த

**ராஜா**

தினசரி: 10.30, 2.30, 5.30 (C/22943)



**நாகம்ஸ்** சுன்னாகம்

இன்று முதல்

பிரபுதேவா, கீர்த்திரெட்டி, வடிவேல், கபாலி, விவேக் நடித்த

**மனதைத் திருடிவிட்டாய்**

காட்சிகள்: 11.00, 5.00 (புதிய நேரம்)


# மரண அறிவித்தல்கள்

## விநாசித்தம்பி செல்லத்துரை செல்வராசா

இணுவில் மேற்கைச் சேர்ந்த விநாசித்தம்பி செல்லத்துரை செல்வராசா நேற்று (16.07.2002) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - சிதம்பரம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் செல்வேந்திரன், செல்வநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் திரவியத்தின் மைத்துனரும் ரதிராணி, விக்கினேஸ்வரன் (சுன்னாகம் ப.நோ.கூ.ச.), ஜெயகாந்தன் (ஆசிரியர், யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்) ஆகியோரின் சிறிய தந்தையாரும் மனோகரன் (பொறியியல் பீடம் - பேராதனை), சுசீந்திரன், உமாகரன், கவிதா, குணலட்சுமி, சர்மிளா (யாழ்.பல்கலைக் கழகம் - விஞ்ஞானம்), கஸ்தூரி, மதுரா, கரிகாலன், இராமகீர்த்தன், இராம்பேகன் ஆகியோரின் பெரியதந்தையாரும், கணேசமூர்த்தி, செல்வவதனா ஆகியோரின் அன்பு மாமனாரும், மோகனஜெனனி, மோகனராஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (18.07.2002) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் பூவோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் மேற்கு, இணுவில்.* (6072) தகவல்: செ.விக்கினேஸ்வரன், செ.ஜெயகாந்தன் (பேறாமக்கள்)

## திருமதி இராசமணி நாகலிங்கம் (நாகலிங்க மாமி)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி நாகலிங்கம் நேற்று (16.07.2002) செவ்வாய்க்கிழமை இணுவில் கிழக்கு அங்களப்பாயில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.07.2002) செவ்வாய்க் கிழமை காரைக்கால் இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அங்களப்பாய், இணுவில் கிழக்கு.* (6086) தகவல்: பேறாமக்கள், மருமக்கள்.

பிரம்மஸ்ரீ

## நடராஜக்குருக்கள் இராமச்சந்திரசர்மா

அராலியைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட ந.இராமச்சந்திரசர்மா நேற்று (16.07.2002) செவ்வாய்க்கிழமை நண்பகல் கொழும்புத்துறையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜக்குருக்கள் - சவுந்தரம்மா தம்பதியினரின் அன்பு மகனும் கணேசசர்மா - சவுந்தரம்மா (கொழும்புத்துறை) அவர்களின் பிரியமுள்ள மருமகனும் பாலசரஸ்வதியின் பாசமுள்ள கணவரும் வைஷ்ணவி (மாணவி, யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), பார்த்திபன் (மாணவன், யா/சென். ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுப்பிரமணியக் குருக்கள் (வேலைக்கைப் பிள்ளையார் கோவில், மானிப்பாய்), நாகேஸ்வரி, கௌரி, காலஞ்சென்ற ராஜேஸ்வரி மற்றும் யோகீஸ்வரி, கேதீஸ்வரக் குருக்கள் (செட்டித் தெருப்பிள்ளையார் கோவில், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் நிரஞ்சனாதேவி, பாலசுப்பிரமணியக் குருக்கள் (ஞானவைரவர் கோவில், ஈச்சமோட்டை), பரமேஸ்வரக் குருக்கள் (அளவெட்டி), சண்முகநாதக் குருக்கள் (மயிலணி, மாரியம்மன் கோவில், சூராவத்தை, சுன்னாகம்), சிற்சபேசக் குருக்கள் (பிள்ளையார் கோவில், குருமன்காடு, வவுனியா) ஆகியோரின் மைத்துனரும் கிருஷ்ணராஜா - இந்திராணி (கந்தர்மடம்) ஆகியோரின் மைத்துனரும் சசிகலாதேவி - ஸ்ரீதரன் (திருநெல்வேலி), மனோரஞ்சிதம் - முத்துச்சாமிக் குருக்கள் (உடுவில்), அனுராதா - முரளீதரக் குருக்கள் (அரியாலை), மீனலோஜினி - சந்திரேஸ்வர சர்மா (மாதகல்) ஆகியோரின் அன்புச் சகலனும் செல்வி இராஜேஸ்வரி கணேசசர்மாவின் அத்தானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.07.2002) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 5.00 மணியளவில் அவரின் மாமனாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப் பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*23,விதானையார் வீதி, கொழும்புத்துறை.* (6088) தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## திருமதி நடராசா பத்மாவதி

வியாபாரிமூலை, புலவத்தையைச் சேர்ந்த திருமதி நடராசா பத்மாவதி அவர்கள் நேற்று (16.07.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கிருபாகரன், கருணாகரன், பத்மாகரன் (சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2002) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலவத்தை, வியாபாரிமூலை, பருத்தித்துறை.* (C/22964) தகவல்: ந.பத்மாகரன் (மகன்)

## பல்கலை மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிக்குமாறு அவருக்கு அறிவிக்கும் படியும் மன்றின் பதிவாளரைப் பணித்தார் நீதிவான் இ.த.விக்னராஜா.

இந்தச் சம்பவம் தொடர்பான குற்றப் பத்திரத்தை எதிர்வரும் 29 ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறும் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டார்.

நேற்றைய தினமும் மன்றில் ஆஜராகாத மற்றைய இரு மாணவர்களுக்குமான பிடியாணை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது. (ம-10)


## நீர்வேலி-கொழும்பு சொகுசு பயண பஸ் சேவை

**கொழும்பில் உங்கள் இல்ல வாசலிலே இறக்கிவிடப்படும்.**
**பஸ், வான், குளிரூட்டப்பட்ட பஸ், வான் சேவை**
**மற்றும் உள்ளூர், அகில இலங்கைச் சுற்றுலா.**

*ஆசனப் பதிவுகளுக்கு:*

**ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்**

நீர்வேலி கந்தசுவாமி கோவில் பின்புறம், நீர்வேலி.

(6041) தொலைபேசி இல :- 070-212354, 070-212383.



*மின் பாவனையாளர்களே!*

**NIPPON** ஏனஜி பல்பை பயன்படுத்தி
உங்கள் மின்சார கட்டணத்தை
5 மடங்காகக் குறையுங்கள்



| விலை | ஏனஜி பல்ப் | சாதாரண பல்ப் |
|---|---|---|
| 295/- | 11w | 55w |
| 340/- | 13w | 65w |
| 340/- | 15w | 75w |
| 450/- | 18w | 90w |
| 470/- | 20w | 100w |
| 490/- | 22w | 110w |
| 500/- | 26w | 130w |

மேற்குறிப்பிட்ட ஏனஜி பல்புகள் 1 வருட உத்தரவாதத்துடன் எமது நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படுகின்றது.

5 பல்பிற்கு மேல் கொள்வனவு செய்பவர்களிற்கு 10 %கழிவு (15.08.2002 வரை) வழங்கப்படும்.

விபரங்களுக்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**
11/10B, ஸ்ரான்லி வீதி, (முட்டாஸ்கடைச் சந்தியருகில்)
யாழ்ப்பாணம். T.P.No: 3335

குறிப்பு :– சகல இன ஏனஜி பல்புகளும் 10 மணித்தியாலத்தில் திருத்திக் கொடுக்கப்படும்.


## கொழும்பில் இரு வர்த்தகர்கள் சுட்டுக்கொலை!

கொழும்பு, வாழைத்தோட்டப் பகுதியில் இரண்டு வர்த்தகர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். நேற்று விடியற்காலை நடைபெற்ற இரண்டு சம்பவங்களில் இவர்கள் கொல்லப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

ரி-56 ரக துப்பாக்கி, கைத்துப்பாக்கி ஆகியவற்றினால் இவர்கள் இருவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்றும் பள்ளிவாசலுக்கு சென்று கொண்டிருக்கையில் அவர்கள் சுடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)

## ஓகஸ்ட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுக் கட்டடங்களில் இருந்து படையினர் விலகுவது போன்று ஈ.பி.டி.பியினரும் பொதுக் கட்டடங்களில் இருந்து வெளியேறவேண்டும் என்றும் -

அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் - கூட்டமைப்பினர் கோரினர்.

இதற்குப் பதில் அளித்த பிரதமர் வடக்கு - கிழக்கில் 67 பொதுக் கட்டடங்களில் படையினர் நிலை கொண்டிருந்தனர். அவற்றில் 20 இடங்களில் இருந்து படையினர் விலகி விட்டனர். எஞ்சியுள்ள 47இடங்களில் இருந்தும் அடுத்த மாதம் 2ஆம் திகதிக்குமுன் படையினர் வெளியேறி விடுவர் என்று தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி.அமைப்பினர் நிலை கொண்டுள்ள கட்டடங்களில் இருந்தும் அவர்களை வெளியேற்ற ஏற்பாடு உள்ளது என்றும் பிரதமர் சொன்னார்.

வலி.வடக்கு, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக நேரில் ஆராய பாதுகாப்பு அமைச்சுச் செயலர் ஒஸ்டின் பெர்னாண்டோ தலைமையிலான குழு ஒன்று எதிர்வரும் 20ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் என்று பிரதமர் தெரிவித்தார்.

சிறைகளில் உள்ள தமிழ்க் கைதிகளை விடுதலை செய்ய பாதுகாப்பு அமைச்சரும் சட்டமா அதிபரும் சேர்ந்து நடவடிக்கை எடுப்பர் என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது. (ம-ஒ-3-12)


## சுடர் ஒளி

**அதிரடி விலைக் குறைப்பு**




(சி22963)

இன்றுமுதல் சுடர் ஒளி வாரப்பத்திரிகையின் விலை 3 ரூபாவால் குறைக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் வாசகர்களுக்கு அறியத்தருகிறோம். புதிய விலை **14/=**


# எம் நெஞ்சை விட்டகலாத அன்புத் தெய்வத்தின்

# 6 ஆவது மாத நினைவலைகள்

**மண்கும்பானைச் சேர்ந்த உயர்குடித்தோன்றல்**

# அமரர் ஐயம்பிள்ளை நடராசா

(உரிமையாளர் - மைதிலி ஜூ வல்லறி, மதனா ஜூ வல்லறி)



**வித்தாய்**
**14-04-1947**

**வேராய்**
**17-01-2002**

*உங்களது வருத்தத்தை எங்களுக்குக் கூறாமல்*
*எங்களது வாழ்வுக்கே ஏற்றம்பெற உழைத்தீர்*
*தங்களது மனையாளும் தவியாய்த் தவிக்கின்றாள்*
*உங்களது நினைவாலே நாம் தினம் வாடுகின்றோம்.*
*அன்போடும் பண்போடும் நீங்கள் அகிலத்தில் வாழ்ந்தீர்கள்!*
*இன்றோடு ஆறுமாதம் பறந்தோடிச் சென்றதே! – ஐயா!!*
*என்றென்றும் எம் நெஞ்சில் மறையாது உங்கள் உருவம்*
*நன்றாக நீர்வாழ்ந்த நாள்கள் நெஞ்சில் நிழலாடுதே!*
*எப்போதும் புன்சிரிப்பும் இனியவார்த்தையும் பேசிடும் உங்களை*
*இப்போதும் எண்ணி எண்ணி மனம் வெதும்புகின்றோம்! நீவிர்*
*தப்பாமல் ஒருமுறை வந்து திருமுகத்தைக் காட்டீரோ?*
*பாசமும் நேசமும் மிகுந்த தந்தையே!*

நீங்கள் எமைப்பிரிந்து ஆறு மாதங்கள் என்ன எத்தனை யுகம்தான் கடந்தாலும் உமது இனிய நினைவுகளை மறக்க முடியாது!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*177, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

(சி22954)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.